REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

E Paper

மின்னிதழ்

2024 ஜூலை 20 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன் 92

வரு. 92 இல. 172 | Saturday 20, July, 2024 | 11 பக்கங்கள் | 50/-


## பேராதனை பல்கலையின் உபவேந்தராக பேராசிரியர் W.M.D.மதுஜித் நியமனம்



பேராதனை பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக பேராசிரியர் டபிள்யூ.எம்.ரி.மதுஜித் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

06



## ஆடிவேல் விழா தேர் பவனியில் பிரதமர்



கொழும்பு சம்மாங்கோடு அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தின் ஆடிவேல் விழா தேர் பவனி நேற்று (19) அலரி மாளிகைக்கு முன்னால் சென்ற வேளை பிரதமர் தினேஷ் குணவர்த்தன, பூஜையில் கலந்துகொண்டபோது பிடிக்கப்பட்ட படம். ஆலய அறங்காவலர் சபையினர் பிரதமருக்கு பொன்னாடை போர்த்தி மரியாதைசெலுத்தினர். அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜா, பாராளுமன்ற உறுப்பினர்களான யதாமினி குணவர்த்தன, ஏ.எச்.எம். பௌசி பிரதமரின் செயலாளர் அநுர திஸாநாயக்க உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகளும் அடியார்களும் பக்தர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

### நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் அன்றி,

# இளைஞர்களே நாட்டின் தேசிய வளமாவர்!

### நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களைப் பாதுகாப்பதா? அல்லது கல்வி, சுகாதாரத்துக்கு பணம் கொடுப்பதா? என்பதை முடிவு செய்ய வேண்டும்

### ருஹுணு பல்கலைக்கழக கட்டட திறப்பு விழாவில் ஜனாதிபதி தெரிவிப்பு



நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதன் மூலம் நாட்டுக்கு கிடைக்கும் நிதியைக் கொண்டு எதிர்காலத்தில் கல்வி மற்றும் சுகாதாரத்துக்காக அதிக நிதியை வழங்க முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். நஷ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்கள் அன்றி, இளைஞர்களே நாட்டின் தேசிய வளமாவர் என்பதை வலியுறுத்திய ஜனாதிபதி, இன்று பல அரச நிறுவனங்கள் அரசாங்கத்துக்கு சுமையின்றி இயங்கி வருவதாகவும், இவ்வருட இறுதிக்குள் ஸ்ரீலங்கன் விமான சேவைகளுக்கான கொடுப்பனவுகளிலிருந்து விடுபட அரசாங்கம்

06

## ஆந்திரா நீர்வேளாண்மை திட்டம்; அமைச்சர் டக்ளஸ் கள விஜயம்



இந்தியாவின் ஆந்திர மாநிலத்துக்கான விஜயத்தை மேற்கொண்டிருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கோதாவரி ஆற்றின் கரையோரத்தில் இராமகுண்டம் பகுதியில் நவீன தொழில்நுட்பத்துடன் கூண்டில் மீன்கள் வளர்க்கும் நீர்வேளாண்மை முறைமையை

06

## ஆஸியின் முன்னாள் பிரதமருடன் ஆளுநர் செந்தில் சந்தித்து பேச்சு



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலியாவின் 30ஆவது பிரதமர் ஸ்காட் மொரிசனை இ.தொ.காவின் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் சந்தித்து, கிழக்கு மற்றும் மலையகம் தொடர்பான மனிதவள வளர்ச்சி குறித்து கலந்துரையாடல் மேற்கொண்டார். மனிதவளத்தை ஊக்குவித்தல், அதை நவீனப்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடியதுடன், இது தொடர்பான வேலைத் திட்டத்தை அவுஸ்திரேலியாவுடன் இணைந்து முன்னெடுப்பது குறித்து கலந்துரையாடப்பட்டது.

### பயங்கரவாத அமைப்பாக இருந்தாலும்

## புலிகள் பாடசாலைகளை ஒருபோதும் மூடவில்லை

### இங்கே 10,000 பாடசாலைகளை மூடிவிட்டு வீராப்பு பேசுகின்றனர்



இந்த நாட்டில் தமிழ் ஈழ விடுதலை புலிகள் பயங்கரவாத அமைப்பாக இருந்த போதிலும், முப்பது வருடகால யுத்தத்தின் போதும் பாடசாலைகளை மூடுவதற்கு விடுதலைப் புலிகள் அனுமதிக்கவில்லை, ஆனாலும் யுத்த சூழலில் இருந்த ஆசிரியர்கள் பதுங்கு குழிக்குள் அமர்ந்து பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கினர். ஆனால் இன்றைய தொழிற்சங்கங்கள் தமது அரசியல்

06



03

### கோழி இறைச்சி, முட்டை, அன்னாசி சீனாவுக்கான ஏற்றுமதி தடை நீக்கம்



03

### 'யுக்திய' அதிரடி சுற்றிவளைப்புகள் 24 மணிநேரத்துள் 789 பேர் கைது

### கட்டார் தொண்டு நிறுவனத்தினால்

## 120 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகள் இலங்கைக்கு அன்பளிப்பு



### சுகாதார அமைச்சுடன் ஒப்பந்தம் கைச்சாத்து

தெஹிவளை, கல்கிஸ்ச விசேட நிருபர்

இலங்கையிலுள்ள கட்டார் தொண்டு நிறுவனமொன்று 120 மில்லியன் ரூபா பெறுமதியான

06

### அரிசியின் விலை குறைவடையும்:

## மின் கட்டண குறைவின் பயனை நுகர்வோருக்கு வழங்க தீர்மானம்



### ஆலை உரிமையாளர்கள் அறிவிப்பு

மின் கட்டணத்தில் மாற்றம் மேற்கொள்ளப்பட்டதையடுத்து, சிறு மற்றும் நடுத்தர அளவிலான நெல் ஆலை உரிமையாளர்கள், அதன் பயன்களை நுகர்வோருக்கு வழங்க தீர்மானித்துள்ளனர்.

நேற்று (19) நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் யு.கே. சேமசிங்க இது தொடர்பாக தெரிவிக்கையில், கைத்தொழில் துறையினருக்கு மின்

06

## அமைச்சர் ஜீவன் – இந்திய தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் சந்தித்து கலந்துரையாடினார். கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று (19) மாலை இந்த சந்திப்பு நடைபெற்றது. இச் சந்திப்பின் போது

06



03

### உற்பத்தியாளர்களுக்கு

### ஒரு முட்டையில் 25 ரூபா இலாபம்



03

### அதிபர், ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர்

### வடமத்திய மாகாணத்துக்குள் டியூஷன் நடத்துவதற்கு தடை

## யாழ்ப்பாணத்து மக்களுக்காக உண்மையாக செயற்பட்டேன்

### மருத்துவத்துறை மாபியாக்களுக்கு பிடிக்கவில்லை -அர்ச்சுனா



யாழ்ப்பாணத்து மக்களுக்காக உண்மையாக நான் செயற்பட்டேன். வைத்தியத்துறை மாபியாக்களுக்கு அது பிடிக்கவில்லை. அதனால் என்னை இங்கிருந்து விரட்டுகின்றனர். ஆனால், இந்த மக்களின் அன்பு என்பது எனது இதயத்துடிப்பு. இந்த மண்ணிலிருந்து விடைபெறுகின்றேன் என சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய

06

### பல்கலைக்கழகங்களுக்கு

## 87,000 மாணவர்கள் இம்முறை Online ஊடாக விண்ணப்பம்




பல்கலைக்கழகங்களுக்காக இந்த வருடம் 87,000 மாணவர்கள் இணையவழியூடாக விண்ணப்பித்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் சந்தன உடவத்த தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களை தெரிவு செய்வதற்காக மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள

06

### லங்கா சதொச நிறுவனத்தில்

## சீனி, பால்மா, அரிசி உட்பட சிலவற்றின் விலை குறைப்பு




அத்தியாவசிய உணவுப் பொருட்கள் சிலவற்றின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச நிறுவனம் அறிவித்துள்ளது. இந்த விலைக் குறைப்பு நேற்று (19) வெள்ளிக்கிழமை முதல் அமுல்படுத்தப்படுவதாகவும்தெரிவித்துள்ளது.

இந்த விலை குறைப்பின்படி ஒரு கிலோ உளுந்து 1,400 ரூபாவாகவும், 400 கிராம் பால்மா

06

### ஜனாதிபதி தேர்தலில் இம்முறை

## விசேட தேவையுடையோர் வாக்களிப்பதற்கும் வசதி



ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை விசேட தேவையுடையவர்கள் முதன்முறையாக வாக்களிப்பதற்கான வசதி ஏற்படுத்தப்படவுள்ளது. பார்வையற்றோர் மற்றும் செவித்திறன் குறைபாடுள்ளவர்களுக்கு இந்த வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

06

# கொழும்பு ஆடிவேல் சித்திரத்தேர் விழா


















கொழும்பு, முதலாம் குறுக்குத்தெரு, சம்மாங்கோடு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தான ஆடிவேல் சித்திரத்தேர் நேற்றுக்காலை பம்பலப்பிட்டி சம்மாங்கோடு மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தை நோக்கி புறப்பட்டுச் செல்வதையும் கணேஸ் டெக்டைல்ஸ், சுங்கத் திணைக்களம், பொலிஸ் தலைமைக் காரியாலயம், மத்தியவங்கி, ஜனாதிபதி செயலகம் தரித்து செல்வதையும் காணலாம்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

தினகரன்
THINAKARAN
2024 ஜுலை 20 சனிக்கிழமை

தொழுகை நேரம்
சுபஹ் - 04.41
லுஹர் - 12.18
அஸர் - 03.43
மஃரிப் - 06.32
இஷா - 07.47

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆடி 04
ராகுகாலம் : காலை : 9.01 - 10.31வரை
சுபநேரம் : மாலை : 3.01 - 4.31வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

# வளர்ச்சியடைந்து வரும் பொருளாதாரத்தின் பலன்கள் மக்களை சென்றடைய வேண்டும்

## அந்தப் பொறுப்பில் இருந்து ஒருபோதும் விலகப்போவதில்லை. தொழில்முறை முச்சக்கரவண்டி மற்றும் போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

மறுமலர்ச்சி கண்டுவரும் இலங்கையில் புதிய முதலீட்டு வாய்ப்புகளுக்காக உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள பாரிய முதலீட்டாளர்களை வரவேற்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேவேளை, கடந்த பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் முன்னேற்றத்துக்கான வேலைத்திட்டத்தை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள இலங்கை கண்காட்சி மற்றும் மாநாட்டு மண்டபத்தில் தொழில்சார் முச்சக்கரவண்டி மற்றும் போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகளுடன் நேற்று முன்தினம்



(18) நடைபெற்ற சந்திப்பிலேயே ஜனாதிபதி இதனை வலியுறுத்தினார்.

இலங்கை இதுவரை அடைந்துள்ள பொருளாதார முன்னேற்றத்தின் பலன்கள் பொது மக்களுக்கும் பகிரப்பட வேண்டும் என்றும், அந்தப் பொறுப்பில் இருந்து தாம் ஒருபோதும் விலகப் போவதில்லை என்பதோடு, அதற்காக அரசாங்கம் சிறப்பான பணிகளை ஆற்றி வருவதாகவும் ஜனாதிபதி கூறினார். முச்சக்கர வண்டி சாரதிகளின் தொழில் உரிமைகளைப் பாதுகாப்பது உள்ளிட்ட யோசனைகள் மற்றும் முன்மொழிவுகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் இதன்போது போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

06

அதிபர், ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர்

# வடமத்திய மாகாணத்துக்குள் டியூஷன் நடத்துவதற்கு தடை

## புதிய சுற்றுநிருபம் வெளியீடு

**திறப்பனை**
**தினகரன் நிருபர்**



வடமத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர், ஆசிரியர், ஆசிரிய ஆலோசகர்கள் டியூஷன் வகுப்புகளில் பணியாற்றுவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

இத்தடை தொடர்பில் வடமத்திய மாகாண பிரதான அமைச்சின் செயலாளரினால் கடந்த 04.07.2024 திகதியிடப்பட்ட NCP/CM/EDU/01/02 என்ற இலக்கம் கொண்ட விசேட சுற்று நிருபம் ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேனவினால் மாகாணக் கல்விப் பணிப்பாளர், அனைத்து பிராந்தியப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கு குறித்த சுற்று நிருபத்தின் ஊடாக இதனைத் தெரிவித்துள்ளார்.

சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் சில அதிபர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்கள் தமது வகுப்புகள் மற்றும் பாடசாலைகளில், மாணவர்களிடம் பணம் வசூலித்து தனியார் டியூஷன் வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை பாடசாலை நேரத்திலோ, பாடசாலை நேரம் முடிந்ததும் அல்லது வார இறுதி நாட்களிலோ நடத்துவதாக தொடர்ந்து முறைப்பாடுகள் உள்ளன.

06

ஜனாதிபதியின் 02 வருட வேலைத்திட்டம்

# வெளியிடப்படும் அடிப்படையற்ற கருத்துகள் எதிரணி பகிரங்க விவாதத்துக்கு வரவேண்டும்



நாடு மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் நாட்டை மீட்டெடுக்கும் சவாலை ஏற்றுக்கொண்ட தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த இரண்டு வருடங்களில் முன்னெடுத்த சரியான பொருளாதார வேலைத்திட்டத்தின் காரணமாகவே நாட்டில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடிந்ததாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். இது தொடர்பாக எதிர்மறையான மற்றும் ஆதாரமற்ற போலியான அறிக்கைகளை வெளியிடும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பொருளாதார ஆராய்ச்சி நிறுவனங்களின் அறிஞர்கள் ஆகியோரை பொதுவான மேடையில் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு இராஜாங்க அமைச்சர் அழைப்பு விடுத்தார்.

06





ருமேனியா மற்றும் போலந்துக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள வெளிநாட்டமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, ருமேனியாவிலிருந்து போலந்து சென்றுள்ளார். அங்கு போலந்து செனட் சபையின் (மேல் சபை) பிரதி மார்ஷல் Magdalena Biejat மற்றும் போலந்தின் கீழ் சபை உறுப்பினர் MWielichowska ஆகியோரை சந்தித்து பேசினார். இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் ஒத்துழைப்புகளை மேம்படுத்துவது குறித்தும் பேசப்பட்டதாக அமைச்சர் அலி சப்ரி தனது 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ளார்.

# ஹிங்குராக்கொட உள்ளூர் விமான நிலையம் சர்வதேச விமான நிலையமாக தரம் உயர்வு

## கட்டுமானப் பணிகள் நேற்று ஆரம்பம்

இலங்கையின் பழைமையான உள்ளூர் விமான நிலையமான ஹிங்குராக்கொட விமான நிலையத்தை சர்வதேச விமான நடவடிக்கைகளுக்காக நவீனமயமாக்குவதற்கு தேவையான நிர்மாணப் பணிகள் நேற்று (19) விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் நடைபெற்றது.

இந்த விமான நிலையம் இரண்டாம் உலகப் போரின் போது இங்கிலாந்தின் ரோயல் விமானப்படைக்காக கட்டப்பட்டது. இந்த விமான நிலையம் அப்போது RAF மின்னேரியா என அழைக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் நாட்டின் மத்தியில் அமைந்துள்ள இந்த விமான நிலையத்தை சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தீர்



மானித்துள்ளது. முதல் கட்டத்தின் கீழ், 2,287 மீட்டர் நீளம் மற்றும் 46 மீட்டர் அகலம் கொண்ட பாதை இந்த நிதியின் விதிகளைப் பயன்படுத்தி 2,500 மீட்டர் வரை நீட்டிக்கப்படும்.

இந்த திட்டமிடப்பட்ட ஓடுபாதையின் அபிவிருத்திப் பணிகள் 06 மாதங்களுக்குள் நிறைவடையவுள்ளதுடன், அதன் பின்னர் எயார்பஸ் 320 மற்றும் போயிங் பி 737 விமானங்களின் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும் என துறைமுக அமைச்சு தெரிவித்துள்ளது.

அனைத்து நிர்மாணப் பணிகளும் இலங்கை விமானப் படையினால் மேற்கொள்ளப்படும் என்றும், கண்காணிப்புப் பணிகளை விமான நிலையம் மற்றும் விமான நிறுவனமே மேற்கொள்ளும் என்றும் Navigation and Aviation வலியுறுத்துகிறது.

இந்த நிர்மாணத்தை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில், இராஜாங்க அமைச்சர் சிறிபால கம்லத், அமைச்சின் செயலாளர் கே.டி.எஸ். ருவன் சந்திரகா, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ, சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் தலைவர் ஜி. விதானகே விமான நிலையம் மற்றும் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் திரு அதுல கல்கட்டிய, சிவில் விமான சேவைகள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் எயார் வைஸ் மார்ஷல் சாகர கொட்டகதெனிய உள்ளிட்ட அதிகாரிகள் குழு கலந்துகொண்டது.

06



கட்டார் தொண்டு நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் மஹ்மூத் எஸ். எம். அபூகலிபாவை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக், கொழும்பில் சந்தித்து பேசியுள்ளார். இச் சந்திப்பு நேற்று 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது திருகோணமலை மாவட்ட வாழ்வாதார உதவிகள் மற்றும் வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோழி இறைச்சி, முட்டை, அன்னாசி சீனாவுக்கான ஏற்றுமதி தடை நீக்கம்



கோழி இறைச்சி, முட்டை மற்றும் அன்னாசிப்பழங்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதில் நீண்டகாலமாக நிலவிய தடைகளை சீன அரசாங்கம் நீக்கியுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த சுங்கப் பொதுநிர்வாக பிரதி அமைச்சர் வாங் லிங்ஜங் உள்ளிட்ட குழுவினருடன் (Vice Minister of General Administration of Customs) நடைபெற்ற கலந்துரையாடலில் இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

06

உற்பத்தியாளர்களுக்கு

# ஒரு முட்டையில் 25 ரூபா இலாபம்



ஒரு முட்டை மூலம் உற்பத்தியாளர் 25 ரூபாய் நியாயமற்ற இலாபம் பெறுவதாக முட்டை வர்த்தக சங்கம் குற்றம் சாட்டியுள்ளது. தற்போது ஒரு முட்டையை உற்பத்தி செய்வதற்கு சுமார் 20 ரூபா செலவாகுமென சங்கத்தின் தலைவர் அனுர மாரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அனுர மாரசிங்க மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பண்ணைகளிலிருந்து 45 ரூபாய் தொடக்கம் 50 ரூபாய் வரையிலான விலைக்கு மொத்த விற்பனையாளர்களுக்கு விற்கப்படுவதால், சந்தையில் முட்டை ஒன்றின் விலை தற்போது 50 ரூபாவைத் தாண்டியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# இராமேஸ்வரத்திலிருந்து படகு மூலம் இலங்கை வர முயன்ற பெண் கைது

## முகவர்களாக செயற்பட்ட 02 பேரும் கைது

**திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது**

இராமேஸ்வரத்திலிருந்து சட்டவிரோதமாக இலங்கைக்கு படகில் வர முயன்ற முல்லைத்தீவு பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் தமிழக பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவருடன் 02 முகவர்களையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

இராமநாதபுரம் கடற்கரைப் பகுதியில் கண்காணிப்புப் பணியில் பொலிஸார் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்துக்கிடமாக நின்ற பெண்ணிடம் விசாரணை செய்த போது, பெண் இலங்கைத் தமிழில் பேசியுள்ளார்.

இதையடுத்து, அவரை பொலிஸ் நிலையத்



துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தியதில், அவர் முல்லைத்தீவு பாண்டியன் குளத்தைச் சேர்ந்த 45 வயது பெண் என்றும் கடந்த 2013ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து மருத்துவ சிகிச்சைக்காக 06 மாத விசா பெற்று சென்னைசென்றதும் தெரியவந்துள்ளது.

புதுச்சேரியில் 24 நாள்கள் தங்கிய இப்பெண், சென்னை வளசரவாக்கம் பகுதியில் உள்ள இலங்கையர் ஒருவரின் வீட்டில் கடந்த 10 ஆண்டுகளாக டெய்லராக வேலை செய்து வந்துள்ளார். கடந்த ஜூன் 30ஆம் திகதி மதுரைக்கு வந்து, உறவினர் உதவியுடன் தங்கச்சிமடத்தைச் சேர்ந்த ஜேசு (35), 17 வயது நபர் ஆகியோரைத் தொடர்பு கொண்டு, இலங்கைக்கு படகில் அழைத்துச் செல்வதற்கு 50,000 ரூபா தருவதாகக் கூறியுள்ளார்.

இதன்படி, இலங்கைக்கு படகில் செல்வதற்காக இராமேஸ்வரத்துக்கு வந்தது விசாரணையில் தெரியவந்தது.

இதுகுறித்து வழக்கு பதிவு செய்து பெண்ணையும் முகவர்களாக செயல்பட்ட இருவரைக் கைது செய்தனர். இதில் தொடர்புடைய மற்றுமொரு நபரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

# 'யுக்திய' அதிரடி சுற்றிவளைப்புகள் 24 மணிநேரத்துள் 789 பேர் கைது



நாடளாவிய ரீதியில் கடந்த 24 மணிநேரத்துள் மேற்கொள்ளப்பட்ட யுக்திய நடவடிக்கையின் போது போதைப் பொருள் குற்றம் தொடர்பில் 789 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 776 ஆண்களும் 13 பெண்களும் காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் 32 பேர் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன், 15 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து 153 கிராம் 313 மில்லிகிராம் ஹெரோயின், 255 கிராம் 184 மில்லிகிராம் ஐஸ், 1,839 கிராம் 429 மில்லி கிராம் கஞ்சா, 9,508 கஞ்சா செடிகள் மற்றும் 101 போதை மாத்திரைகள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆடி மாதம் 04ஆம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 13

### குறள் தரும் சிந்தனை



அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்

பலகோடிப் பொருள்களை அடுக்கிக் கொடுத்தாலும் சிறந்த குடியில் பிறந்தவர்கள் அந்தச் சிறப்புக் கெடுவதற்கான செயல்களுக்கு இடம் தரமாட்டார்கள்.

# வகுப்பறைக் கற்றல் மாத்திரம் முழுமையான பலனை தராது!

எமது நாட்டின் எதிர்கால முன்னேற்றத்துக்கான வலுவான தூண்களாக மாணவர் சமுதாயத்தைக் குறிப்பிடலாம். ஆகவே இன்றைய மாணவர்கள் கல்வியில் மாத்திரமன்றி, இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் ஆளுமை நிறைந்தவர்களாகக் கட்டியெழுப்பப்படுவது மிகவும் அவசியம்.

மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு கல்வி மாத்திரமே பிரதானமானதல்ல. வகுப்பறைக் கற்றலுக்கு நிகராக இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுவது அவசியமாகின்றது.

இன்றைய எமது சிறுவர்களே நாளைய தலைவர்களாக உருவாகப் போகின்றவர்களாவர். நாளைய தலைவர்களை உருவாக்குவதில் பாடசாலைகளே பிரதான பங்கு வகிக்கின்றன. எனவே நாட்டில் சிறந்ததொரு சமூகத்தை உருவாக்குவதற்கான பொறுப்பு பாடசாலைகளிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது எனலாம்.

எனவே பாடசாலைகள் வெறுமனே வகுப்பறைக் கல்விக்கு மாத்திரம் முக்கியத்துவம் அளிக்காது, மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் முக்கியத்துவம் வழங்குவது அவசியமாகின்றது.

மாணவர்கள் தங்களது பாடசாலைப் பருவத்தில் இத்தகைய இணைப்பாட விதான செயற்பாடுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வார்களானால் எதிர்காலத்தில் அவர்கள் தலைமைத்துவப் பண்பை விருத்தி செய்து கொள்வதற்கு வழியேற்படுகின்றது. சவால்களை துணிச்சலுடன் எதிர்கொள்ளல், பொறுமையை வளர்த்தல், ஏனைய சமூகங்களுடன் நல்லிணக்கத்தைப் பேணுதல், குரோதம் தவிர்த்தல் போன்ற சீரிய பண்புகள் மாணவர்களிடத்தில் விதைக்கப்படுவதற்கு இணைப்பாடவிதான செயற்பாடுகள் துணை புரிவதாக உளவியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

மாணவர் மத்தியில் நல்லிணக்கம் என்பது பாடசாலைப் பருவத்தில்தான் உருவாகின்றது. குடும்பச் சூழலில் இருந்து பாடசாலைக்குள் பிரவேசிக்கின்ற மாணவன் ஒருவன், புதிய சூழலில் புதிய அனுபவங்களைப் பெறுகின்றான். பாடசாலையில் அவனுக்கு அத்தனை பேருமே புதிய முகங்களாக உள்ளனர். பலவிதமான சூழலில் இருந்து வருகின்ற சகமாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை அவன் சந்திக்கின்றான். அத்துடன் அவர்களுடன் நெருங்கிப் பழக வேண்டிய கட்டாயத்துக்குள் அவன் தள்ளப்படுகின்றான்.

அங்குதான் அவனுக்கு நல்லிணக்கமும் அந்நியோன்யமும் அவசியமாகின்றன. அவனுக்கு புதிய நட்பு வட்டமொன்று அங்கே உருவாகின்றது. அந்த மாணவன் நட்பு வட்டத்துடன் நெருக்கமாகின்றான்.

ஆனால் வெறும் வகுப்பறைக் கற்றலினால் அம்மாணவனின் கல்வியறிவு மாத்திரம் வளர்ச்சியடையுமே தவிர, ஆளுமைப் பண்புகள் விருத்தி பெறுமென எதிர்பார்க்க முடியாது. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் பங்கு கொள்வதன் மூலமே ஆளுமைப் பண்புகளும் தலைமைத்துவப் பண்புகளும் விருத்தியடைகின்றன.

ஒரு குடும்பத்தை வழிநடத்துவதற்கோ அல்லது ஒரு நிறுவனத்தை இயக்குவதற்கோ தலைமைத்துவப் பண்பு இன்றியமையாதது. அதைப் பெற்றுக் கொள்வதற்கு இணைப்பாடவிதான செயற்பாடுகளே துணைபுரிகின்றன என்பதே உண்மை.

சமூகப்பிராணியான மனிதன் தனது சமுதாய வாழ்க்கைக்கான பயிற்சியை பாடசாலைகளினூடாகவே பெற்றுக் கொள்கின்றான்.அவன் கல்வியை மாத்திரமன்றி, தனது வாழ்க்கைக்குத் தேவையான ஏனைய பயிற்சிகளையும் பாடசாலையிலேயே பெற்றுக் கொள்கின்றான். விளையாட்டு, நாடகம், பாடல், கலைநிகழ்ச்சிகள், இலக்கிய அரங்கங்கள் போன்ற இணைப்பாடவிதான செயற்பாடுகளே மாணவர்களின் சமுதாய வாழ்க்கைக்கான பயிற்சிக் களமாக அமைகின்றன.

சகமாணவர்களுடன் மாணவன் நல்லிணக்கத்தையும், நட்புறவையும் வளர்த்துக் கொள்வதற்கான களமாக இணைப்பாடவிதான செயற்பாடுகளே அமைகின்றன. கல்வி அறிவை மாத்திரம் நோக்கமாகக் கொள்ளாமல், சமுதாயத்திற்கு ஏற்றாற்போல் உடல், உள, சமூக, பண்பாடு, ஆளுமை என சகல ஆற்றல்களையும் கொண்ட பூரண மனிதனாக மாணவனை மாற்றுவதற்கான களமாக இணைப்பாடவிதான செயற்பாடுகளே அமைகின்றன.

அதாவது பாடசாலை வகுப்பறைப் போதனைக்கு அப்பால், மனித ஆளுமைகளை வளர்க்கக் கூடிய பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களில் மாணவர்களை பங்கு கொள்ளச் செய்வதன் மூலம் மாணவர்களை பூரண மனிதனாக மாற்றும் செயற்றிட்டம் இணைப்பாடவிதான செயற்றிட்டம் ஆகும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இணைப்பாடவிதான செயற்பாடுகளான விளையாட்டுப் போட்டி, கலைவிழா, பரிசளிப்பு விழா, தமிழ்த்தினப் போட்டி, வாழ்க்கைத்திறன் நிகழ்ச்சி, கண்காட்சி, சமயம் சார்ந்த விழாக்கள், நூல் வெளியீடு, சஞ்சிகை வெளியீடு, கல்விச் சுற்றுலாக்கள், வெளிக்கள ஆய்வுகள், மரநடுகை போன்றவற்றில் மாணவர்களை ஈடுபடுத்துதல் ஆளுமை விருத்திக்கு அடித்தளமிடுவதாக உள்ளது.

உடல், உள்ளம் ஆகியவற்றை ஒருங்கே வளரச் செய்தல், தலைமைத்துவப்பண்பு வளர்த்தல், வெற்றி தோல்வியை வமமாக மதிக்கும் பண்பு,குழு முயற்சி கூட்டுறவுப் பண்பு,மொழித்திறன் விருத்தி,கலையுணர்வு,ஆசிரியர் மாணவர்களுக்கிடையே அந்நியோன்னியத் தொடர்பு போன்றவையெல்லாம் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் பலாபலன்கள் ஆகும்.

ஆகவே பிள்ளைகளின் பூரண விருத்திக்கு இணைப்பாடவிதான செயற்பாடுகள் முக்கியம் என்பதால் வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் அக்கறை காட்ட வேண்டியது அவசியமானதாகும். ஆகவே கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு அப்பால் இணைப்பாடவிதான செயற்பாடுகளின் முக்கியத்துவமும் அவசியம் பற்றி இன்றைய பாடசாலைகள் மாத்திரமன்றி, பெற்றோரும் உணர வேண்டியது அவசியமாகும்.

editor.tkn@lakehouse.lk

# இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நேர்மையான விஷயங்களுக்கு ஆதரவளிப்போம்



## தமிழகத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்.ஃ. ஹக்கீம் பேட்டி

‘இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க அரசு மேற்கொள்ளும் நேர்மையான விஷயங்களுக்கு நாங்கள் ஆதரவு அளிக்க தயாராக இருக்கிறோம். அதேசமயம் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக மக்களின் மீது வரிச் சுமையை அரசு ஏற்ற முடியாது’ என்று தமிழகத்திற்கு விஜயம் மேற்கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஃ ஹக்கீம் தெரிவித்தார்.

தமிழகத்தில் பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக தென்காசி மாவட்டம் கடையநல்லூருக்கு கடந்த திங்கட்கிழமை வருகை தந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீமுக்கு இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம் செய்தியாளர்களிடம் கூறியதாவது :

“அமெரிக்கா, சீனா, இந்தியா உள்ளிட்ட வல்லரசு நாடுகளின் போட்டிக்களமாக இலங்கை இருந்து வருகிறது. நட்பு நாடான இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லாத வகையில் மற்றைய நாடுகளின் முதலீட்டுத் திட்டங்கள் இலங்கையில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க அரசு எடுக்கும் நேர்மையான விஷயங்களுக்கு நாங்கள் ஆதரவு அளிக்க தயாராக இருக்கிறோம். ஊழலுக்கு எதிராக நாங்கள் நாடாளுமன்றத்தின் உள்ளேயும் பொதுவெளியிலும் தொடர்ந்து குரல் கொடுத்து வருகிறோம்.

இந்தியாவில் இலங்கை அகதிகள் நீண்ட காலமாக தங்கி இருந்து வருகின்றனர். அவர்களின் பிரச்சினைகள் குறித்து மத்திய மாநில அரசுகள் திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகின்றன. அதே சமயம் அகதிகள் பிரச்சினையில் தீர்வு காண இந்திய அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க இலங்கை தயாராக உள்ளது. மீன்பிடிப்பது தொடர்பாகவும், கடல் எல்லைப் பிரச்சினை தொடர்பாகவும் இருநாட்டு மீனவர்களுக்கும் இடையே அவ்வப்போது பிரச்சினை ஏற்பட்டு வருகிறது. இது தொடர்பாக இரு நாட்டு மீனவர்களும் அமர்ந்து பேச வேண்டும். இப்பிரச்சினைக்கு தீர்வு காண இலங்கையும் தொடர்ந்து முயன்று வருகிறது.

அமெரிக்க முன்னாள் அதிபர் மீது நடந்த தாக்குதல் சம்பவத்தில் இருந்து அங்குள்ள பாதுகாப்பு குறைபாடுகளை உணர முடிகிறது. வேட்பாளர்களும் தங்களின் பாதுகாப்பு குறித்து உரிய கவனம் செலுத்த வேண்டும்”.

பேட்டியின் போது இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தேசிய தலைவர் பேராசிரியர் கே எம் காதர் மொகிதீன், முஸ்லிம் துணை தலைவரும் தமிழக வக்பு வாரிய தலைவருமான எம். அப்துல் ரகுமான், தென்காசி மாவட்ட தலைவர் எம் அப்துல் அஜீஸ், மாவட்ட செயலாளர் எஸ் சையது பட்டாணி, மாவட்ட பொருளாளர் பி. ஏ. செய்யது மசூது உட்பட ஏராளமான முஸ்லிம் லீக் தொண்டர்கள் உடன் இருந்தனர்.

திருச்சி
எம்.கே.ஷாகுல் ஹமீது...

# திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் ஆடி அமாவாசை திருவிழா

திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய ஆடி அமாவாசை உற்சவமானது கடந்த 2024.07.18 அன்று ஆலய பரிபாலன சபைத் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஸ் தலைமையில் கொடிஏற்றத்துடன் ஆரம்பமாகியது. எதிர்வரும் 2024.08.04ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் இடம்பெற உள்ளது.

ஆடிஅமாவாசை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 18 நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று இறுதியில் சமுத்திர தீர்த்தோற்சவம் நடைபெறுவது வழமையாகும்.எதிர்வரும் 04 ஆம் திகதி ஆடிஅமாவாசை தினத்தன்று தீர்த்தோற்சவம் நடைபெறும்.

மட்டக்களப்பு மான்மியக் குறிப்பின்படி சுப்பிரமணியருடைய ஆணைப்படி சூரனைக்கொன்று வெற்றியுடன் மீண்ட வேலானது உக்கிரத்தோடு வரும் வழியில் எதிர்ப்பட்ட வாகூர மலையை இருகூறுகளாய் பிளந்தெறிந்து கடலில் மூழ்கியபின்னர் மூன்று கதிர்களைச் சிந்திச்சென்றதென்றும் வேலுருக்கொண்ட அக்கதிர்கள் மூன்றும் முறையே உகந்தை மலை உச்சியிலும் திருக்கோவிலில் ஒரு வெள்ளை நாவல் மரத்தின் மீதும் மண்டூரில் ஒரு தில்லைமரத்தின் மீதும்தங்கியிருந்தன என்றும் அவ்வவ்விடங்களில் வாழ்ந்த மக்கள்( வேடர்கள்) வியப்புடன் நோக்கி கொத்துப் பந்தர்களால் ஆலயம் அமைத்து வழிபட்டனர் என்று கூறப்படுகிறது.

முதலிரு ஆலயங்களிலும் பார்க்க திருக்கோவில் ஆலயம் வரலாற்றோடு கூடுதல் தொடர்புடையதாயிருக்கிறது. திருக்கோவிலில் வேடர்களால் இலைகுழைகளைக்கொண்டு முருகனுக்கு அமைக்கப்பட்டிருந்த கோயிலைத் தமிழரின் இரண்டாம்படை எழுச்சியின்போது வந்த சோழநாட்டு மன்னர் எழுவர் கல்லினாற் கட்டி முடித்தனரென்றும் வேடரது பந்தருக்குள் வடக்குமுகமாக வீற்றிருந்த வேலானது புதிய கற்கோயிலுட் கிழக்கு முகமாகத் திரும்பிவிட்ட காரணத்தினால் திருக்கோவில்(திரும்பிய கோவில்) என்று பெயரிட்டார் என்றும் திருக்கோவில் பற்றிய பதிகம் ஒன்று கூறுகிறது.

திருக்கோவிலின் பழையபெயர் நாகர்முனை



என்றும் கோவில் அமைக்கப்பட்ட பின்னர் அக்கோவில் சிறப்பால் இடப்பெயரும் ‘திருக்கோவில்’ என மாறிற்று என்றும் அறிகிறோம்.

திருக்கோவிலுள்ள கல்வெட்டுக்களும் பட்டயங்களும் அதன் வரலாற்றைத் துல்லியமாக எடுத்துக்கூறவல்லன. அக்காலத்தில் கல்முனை கரவாகுபற்று தொடக்கம் பாணமை உகந்தை வரை வன்னிமை ஆட்சிக்காலம் நிலவியது. அக்காலத்தில் இப்பிரதேசங்களை காலத்திற்கு காலம் பல சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்துள்ளார்கள். கிழக்கில் ஒவ்வொரு பிரதேசங்களையும் ஆளுகையாகக்கொண்டு பல சிற்றரசர்கள் ஆட்சிபுரிந்துள்ளார்கள் என்பதற்கு பல்வேறு சான்றுகள் இருக்கின்றன.

அந்தவகையில் கல்முனை கரவாகுப்பற்று தொடக்கம் அன்றைய நாகர்முனை என அழைக்கப்பட்ட இன்றைய திருக்கோவில் மற்றும் பாணமை உகந்தை வரை கல்முனையில் பழம்பெரும் கிராமமான நற்பிட்டிமுனையை மையமாகக் கொண்டு வாழந்த இரு வன்னிமை சிற்றரசர்கள் பரிபாலித்து வந்துள்ளனர்.

நற்பிட்டிமுனையில் வாழ்ந்த வன்னிமை சிற்றரசர்களான சத்துருகப்போடி சின்னத்தம்பி (பதவிக்காலம்1902), சின்னத்தம்பி செல்லையா (பதவிக்காலம்1908இலிருந்து) ஆகிய இருவருக்கும் அன்று பிரிட்டிஷ்காரர்கள் வழங்கிய அதிகாரம் தொடர்பான நியமனம் மற்றும் சிற்றரசர்களாக இருநது அவர்கள் ஆற்றவேண்டிய பணிகள் பற்றிய வரலாற்று ஆவணம் இன்றும் பாதுகாக்கப்பட்டுவருகின்றது. இவர்களின் பரம்பரையினர் இன்றும் வாழ்ந்துவருகின்றனர். ஆலயத்தை பரிபாலித்து வருகின்றனர். இது பாரம்பரியமாக மரபுரீதியாக நிருவாகக் கட்டமைப்பைக் கொண்டுள்ளது. செல்லையா வன்னிமை என்பார் சந்ததியே தலைமைப்பதவியை வகிக்ககூடியவர்கள் ஆவர். இது ஆலய யாப்பிலும் எழுதப்பட்டுள்ளது.

இங்குள்ள யாப்பு 1952ம் ஆண்டு எழுதப்பட்டவையாகும். அதற்கு முன்பு எழுதப்படாத யாப்பின் பிரகாரம் ஆலயம் நிருவகிக்கப்பட்டுவந்தது.

தற்போது மகாசபை உறுப்பினர்கள் 06 பேர் வட்டாரப்பொறுப்பாளர்கள் 20 பேர். மொத்தமாக 26 பிரதிநிதிகள் ஆலயத்தைப் பரிபாலித்துவருகின்றனர்.

**தற்போதுதியங்கும் புதிய நிருவாகசபை:**

தலைவராக சுந்தரலிங்கம் சுரேஸ் (வன்னிமை வம்சவரன் நற்பிட்டிமுனை) வண்ணக்கராக வன்னியசிங்கம் ஜெயந்தன் (தம்பிலுவில்)செயலாளராக அ.செல்வராஜா (திருக்கோவில்) உபதலைவராக க.சபாரெட்ணம் (அக்கரைப்பற்று) பொருளாளராக கொ.கிருஸ்ணமூர்த்தி (தம்பிலுவில்) கணக்குப்பிள்ளையாக இ.லோகிதராஜா (அக்கரைப்பற்று) ஆகிய அறுவரும் மகாசபை பிரதிநிதிகளாவர்.

இதைத்தவிர 20 வட்டாரப்பிரதிநிதிகள் பொத்துவில் முதல் எருவில் ஈறாகவுள்ள தமிழக்கிராமங்களைப் பிரதிபலிப்போராகவுள்ளனர்.

ஆலய பிரதமகுருவாக பல்லாண்டுகாலம் பிரம்ஸ்ரீ. நீதிநாதக்குருக்கள் பணியாற்றிவந்தார்.அவராது மறைவின்பின்னர் அவரது மருகர் பிரபல சிவஸ்ரீ.சண்முக மகேஸ்வரக்குருக்கள், மகன் சிவஸ்ரீ. அங்குசநாதக் குருக்கள் போன்றோர் பூஜை புனஸ்காரங்களை சிறப்பாக நடாத்திவருகின்றனர்.

இறந்தோர்க்கான பிதிர்கடன் செலுத்துதலுக்கு உகந்த திருக்கோவில் ஆடிஅமாவாசைத் தீர்த்தமானது கிழக்கு மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதேபோன்று பிதிர்கடன் செலுத்துதலுக்கு (கிழக்கில்)மட்டக்களப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையாரின் தலமும், ஆடி அமாவாசைத் தீர்த்தமும் முக்கியத்துவம் பெறுகின்றன.

விபுலமாமணி
வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# தமிழக சொற்பொழிவாளர் தேச மங்கையர்க்கரசி இன்று இலங்கை வருகை

தமிழ்நாட்டின் முன்னணி இலக்கிய மற்றும் சமய சொற்பொழிவாளரும், சிறந்த முருக பக்தையும், திருமுருக வள்ளல் வாரியார் சுவாமிகளின் மாணவியுமான திருமதி தேச மங்கையர்க்கரசி அவர்கள் இன்று 20.07.2024 கொழும்பு வருகின்றார். ரவி ஜுவலர்ஸ் அனுசரனை வழங்கும் இவரது ஆன்மீக சொற்பொழிவுகள் இன்று மாலை 7.15மணிக்கு கொழும்பு ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணியர் கோவிலில் சிறப்பு அம்சமாக இடம்பெறும். ஞாயிற்றுக்கிழமை (21.07.2024) பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயத்தில் இடம்பெறும்.

தேச மங்கையர்க்கரசி அவர்கள் தேவி சண்முகம் மற்றும் பாக்கியலட்சுமி தம்பதியினருக்கு முதல் குழந்தையாக பிறந்தவர். தேச என்பது அவருடைய தந்தையின் முன் எழுத்துக்கள் தேவி சண்முகம் (தந்தை). இவர் 19ஆம் திகதி மே மாதம் 1984 இல் திரு. தேவி சண்முகம் மற்றும் திருமதி பாக்கிய லட்சுமி அவர்களின் மூத்த புதல்வியாக மதுரையில் பிறந்தார்.



இளம் வயது முதேல திருக்குறள் மீது ஆர்வம் கொண்டு தனது 6வது வயதிலேயே சகல திருக்குறள்களையும் மனப்பாடமாக சொல்லும் ஆற்றல் பெற்றிருந்தார். மதுரையில் வாரியார் சுவாமிகளின் சொற்பொழிவு எங்கு நடந்தாலும் அங்கே மங்கையர்கரசியையும் அழைத்துச் சென்றனர்.

இதிகாசங்களான கம்ப இராமாயணம் ,வில்லி பாரதம் மற்றும் கந்த புராண சாரம்சத்தை வாரியாரிடம் இருந்து கற்றுக்கொண்டார். இருவரும் ஒரே மேடையில் ஒரே தலைப்பில் இரு கோணங்களில் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

தனது 13வது வயதில் முதன் முதலில் வெளி நாடு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். தேச மங்கையர்க்கரசி அவர்கள் அமெரிக்கா அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, சிங்கப்பூர், மலேசியா, ஐக்கிய அரபு நாடுகள், இந்தோனேசியா, செசல்சு, குவைத். கனடா, ஓமன், பஹரைன் , இலங்கை , கம்போடியா, நேபாளம் போன்ற நாடுகளில் பயணம் செய்து சொற்பொழிவு ஆற்றியுள்ளார். அனைத்து முன்னணி தொலைக்காட்சி சேனல்களிலும் நிகழ்ச்சி செய்து வருகிறார். தனது 38 வயதிற்குள்பல ஆயிரம் மேடைகள் கண்டவர்.

திருவாவடுதுறை ஆதீனம் இவரது தமிழ் மற்றும் சைவப் பணியைப் பாராட்டி 'செந்தமிழ் நாவுக்கரசி' என்கிற பட்டத்தை 2017ஆம் ஆண்டு வழங்கியும் கூனம்பட்டி கல்யானபுரி ஆதீனம் இவரது சைவ சமயப் பணியைப் பாராட்டி 'சைவ சமய நெறிசு; செஞ்சுடர'; என்ற பட்டத்தை 2017 ஆம் ஆண்டு வழங்கி கௌரவித்ததுள்ளது.

மேலும் திருக்குறள் செல்வி, தெய்வக்குழந்தை, சொல்லரசி, ஞான குழந்தை, இளமுதுஞானவாணி, கலைவாணி, கம்ப்யூட்டர் சிறுமி, பேச்சுக்கரசி, சிந்தனை செல்வி, ஆன்மீக திலகம், ஆன்மீக சொற்பொழிவு பேரரசி,ஆன்மீக இளவரசி, முத்தமிழ் பேரரசி, குருவருட்செல்வி கிருபானந்த வாணி போன்ற பல பட்டங்களை தமிழக மக்கள் வழங்கி கௌரவித்துள்ளனர்.

இலங்கையில் சைவ சிரோன்மணி, செசல்சுயில் ஆன்மீக அருட்செல்வி, சுவிட்சர்லாந்தில் சைவத் தமிழ் கலைவாணி, முத்தமிழ் சிவசெல்வி, அருள்மொழி நங்கை, செந்தமிழ் தேன்மொழி நங்கை, நாவுக்கரசி, லண்டனில் திருவருட் கலைச்செல்வி, இறையருட் செல்வி, மலேசியாவில் ஆன்மீக அரசி, குவைத்தில் நற்றமிழ் நாயகி, கனடாவில் வாகீச கலாநிதி ஆகிய பட்டங்கள் வழங்கி கௌரவித்துள்ளனர்.

தமிழ் நாட்டின் மிக உரிய விருதான 'கலைமாமணி' விருதை தமிழ் நாடு அரசு இவருக்கு அளித்து சிறப்பித்துள்ளது. சமய சொற்பொழிவாளர் வரிசையில் மிகவும் குறைந்த வயதில் இந்த விருதினை பெற்றவர் என்ற பெருமை தேச மங்கையர்க்கரசி அவர்களையே சாரும்.

ராஜுவ் காந்தி மூப்பனார் நினைவு விருதினை 2011 ஆம் ஆண்டு பெற்றார். தமிழ்நாடு இந்து நிலைய அறநிலையத்துறை உயர் மட்ட ஆலோசனைக் குழு உறுப்பினராகவும், தமிழ்நாட்டில் உள்ள அறநிலைத்துறை ஆலயங்களில் இயல், இசை, நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யும் பொறுப்பிலும், அறநிலைய்த்துறை ஆலயங்களிலும், அறநிலயத்துறை கல்லூரிகளிலும் சமய வகுப்புக்கள் ஒருங்கினைக்கும் குழுவிலும், இந்து சமய அறநிலையத்துறை ஆலயங்களில் அறங்காவலர்களை நியமிக்கும் குழுவிலும் பணியாற்றி வருகின்றார்.

எச்.எச்.விக்கிரமசிங்க...

# கட்டார் தொண்டர் நிறுவனத்துடன் சுகாதார அமைச்சு ஒப்பந்தம்

இலங்கையில் உள்ள கட்டார் சரட்டி நிறுவனத்துக்கும் சுகாதார அமைச்சுக்கும் இடையே 120 மில்லியன் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்களை நன்கொடையாக வழங்கும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. கட்டார் நாட்டின் இந்நிறுவனம் இலங்கையில் சுகாதார மேம்படுத்தல் திட்டத்திற்கு உதவுகின்றது.

இந்நிகழ்வில் சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன, அமைச்சின் செயலாளர் பி.ஜி. மகிபால, பணிப்பாளர் டொக்டர் அஸ்ல குணவர்த்தன மற்றும் என்.ஜி.ஓ. சஞ்சிவ விமலகுணவர்த்தன ஆகியோர் கலந்து கொண்டார்கள். இந்நிகழ்வு சுகாதார அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது.

கட்டார் நாட்டின் இலங்கைக்கான பணிப்பாளர் மொஹுமூத் அபு கலிபா ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், “இலங்கையில் மக்கள் நோய்களிலிருந்து குணமடைவதற்காக எமது கட்டார் சுகாதார திட்டம் மருந்துப் பொருட்களை வழங்குகின்றது. இந்தத் திட்டத்தினால் இந்நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் குணமடைவதற்காக நாம் உதவுகின்றோம். அவர்கள் எமது இச்சுகாதார திட்டத்தினால் நன்மையடைவார்கள்என எதிர்பார்க்கின்றோம்” என்றார்.



அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன அங்கு உரையாற்றுகையில், கட்டார் நாட்டிற்கும் மக்களுக்கும் இலங்கையில் உள்ள கட்டார் தூதரகம் மற்றும் சரட்டபிள் நிறுவனத்திற்கும் இலங்கை மக்கள் சார்பாக நாங்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்” என்றார்.

அஷ்ரப் ஏ சமத்...

# சவூதி அரசு, UpLink இணைந்து கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடு தொடர்பான சவால் அறிவிப்பு




சவூதி அரேபியாவின் பொருளாதார மற்றும் திட்டமிடல் அமைச்சு, ஆற்றல்கள் அமைச்சு, UpLink உடன் இணைந்து, கார்பன் பொருளாதாரத்தை துரிதப்படுத்தும் புதுமையான தீர்வுகளைக் கண்டறிவதை நோக்காக கொண்டு, கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாடு தொடர்பான ஒரு சவாலை கடந்த வாரம் உத்தியோக பூர்வமாக அறிவித்தது. கடந்த ஜூலை 10 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் நிலையான வளர்ச்சிக்கான உயர்மட்ட அரசியல் மன்றத்தின் (HLPF) போது இச்சவால் அறிவிக்கப்பட்டது.

கார்பன் பிடிப்பு தொழில்நுட்பம், நாவல் கார்பன் பயன்பாட்டு முறை மற்றும் தொழில்துறை ஒருங்கிணைப்பு போன்ற நிலையான மாற்றத்தின் மூலம் கார்பன் உமிழ்வைக் குறைக்கும் புதுமையான தீர்வுகளை கொண்ட திட்டங்கள் அல்லது யோசனைகளை சமர்ப்பிப்பதையே இந்த சவாலானது தொழில் துறையினரிடம் வேண்டி நிற்கிறது. இந்த திட்டம் கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாட்டை (CCU) வலியுறுத்துவதோடு, ஒரு நிலையான மற்றும் பொருளாதார ரீதியாக வளமான எதிர்காலத்தை உருவாக்குவதில் இவ்வாறான புத்தாக்க சிந்தனைகள் வகிக்கும் முக்கிய பங்கை வலியுறுத்துகிறது. அத்துடன் சவூதி அரேபியாவின் முக்கிய இலக்குகளில் ஒன்றான 2060 ஆகும் போது நிகரபூச்சியத்தை அடைதல் என்பதற்கான கார்பன் அகற்றலின் அவசியத்தையும் வலியுறுத்துகிறது.

நிகர பூஜ்யம் (netzero) என்பது காபன் உமிழ்வை குறைத்தல் மற்றும் கார்பன் டை ஒக்சைட் உறிஞ்சுதல் நுட்பங்களை செயல்படுத்துவதன் மூலம் மனித நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட பச்சை இல்ல வாயுக்களின் அளவை முற்றிலுமாக அகற்றுவதை குறிக்கிறது.





சவூதி அரேபியாவின் எரிசக்தி அமைச்சர் இளவரசர் அப்துல் அசீஸ் பின் சல்மான் கருத்துத் தெரிவிக்கையில், "காலநிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மை போன்றன உலகளாவிய பிரச்சினைகளாகும், பிராந்திய ரீதியாகவோ அல்லது சிறிய புவியியல் எல்லைகளுக்குள்ளோ இது பற்றி கலந்துரையாட முடியாது, மாறாக உலகளாவிய ரீதியாக அணுக வேண்டிய பிரச்சனையாகும்" எனக் கூறினார்.

"சவூதி அரேபியா தனது லட்சிய இலக்கான நிகர பூச்சியத்தை 2060 க்குள் அடைவதற்கான தனது முயற்சிகளை வட்ட கார்பன் பொருளாதார கட்டமைப்பின் மூலம் மேம்படுத்த முயல்கிறது. இக்கட்டமைப்பானது, கார்பன் உமிழ்வின் தாக்கத்தை குறைப்பது மட்டுமல்லாமல், கார்பனை ஒரு மாசு பொருளாக்காமல் பொருளாதார பெறுமதியுடன் கூடிய ஒரு வளமாக மாற்றுகிறது" எனவும் அப்துல் அஸீஸ் பின் சல்மான் தெறிவித்தார்.

மேலும், சவூதியின் மேற்குறிப்பிட்ட இலக்கை 2060 இல் அடையவும், உலகளவில் கார்பனின் பொருளாதார பயன்பாட்டை முழுமையாகப் பெறவும், முன்னணி நிறுவனங்களுடன் இணைந்து இந்த உலகளாவிய கார்பன் பிடிப்பு மற்றும் பயன்பாட்டு சவாலை சவூதி தொடங்கியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

சவூதி அரேபியாவின் பொருளாதாரம் மற்றும் திட்டமிடல் அமைச்சர் பைசல் அலிப்ராஹிம் கூறுகையில், சவூதி அரசு ஒரு நியாயமான, ஒழுங்கான மற்றும் நடைமுறையான ஆற்றல் மாற்றத்தில் ஆர்வமாக உள்ளது அத்தோடு கார்பன் பொருளாதார கட்டமைப்பின் முன்னேற்றத்தை நோக்கி செயல்படுகிறது. கார்பன் பொருளாதாரத்தில் உள்ள புத்தாக்கங்கள் தொடர்பான இந்த சவாலின் மூலம், குறிப்பிட்ட புத்தாக்க முயற்சிகளை மேலும் முன்னேற்றமடையச் செய்ய துணையாக அமையும் புதிய தீர்வுகளை அவர்கள் எதிர் பார்ப்பதாக குறிப்பிட்டார்.

சமர்ப்பிக்கக் கூடிய புத்தாக்க திட்டங்கள், எந்தளவு பொருளாதார நலன்களை ஈட்டித்தரக் கூடியன, எந்தளவு எதிர்காலத்தில் வளர்ச்சியடையக் கூடியன, பண ரீதியான முதலீடுகளை மற்றும் நிதியை ஈட்டித் தரக் கூடிய வள்ளமை மற்றும் சந்தையில் அந்தந்த திட்டங்களின் பெருமானம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்படும். இந்த சவாலில் வெற்றி பெறுபவர்கள் சிறந்த கண்டுபிடிப்பாளர்களாகக் கருதப்பட்டு, நிறுவனர்கள், CEOக்கள் மற்றும் இயக்குநர்கள் போன்ற தலைவர்களுக்கான சிறப்புத் திட்டமான UpLink Innovation Ecosystem இல் இணைத்துக் கொள்ளப்படுவர். வெற்றியாளர்களுக்கு CHF 300,000 வரையான பரிசுத் தொகை வழங்கப்பட்டு அவர்களால் முனமொழியப்பட்ட திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான ஆதரவையும் பெறுவார்கள்.

காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கும், காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்கு மற்ற நாடுகளுடன் ஒத்துழைத்து சவூதி அரேபியா நீண்ட காலமாக பங்காற்றி வருகிறது. பாரிஸ் உடன்படிக்கை மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாட்டிற்கு இணங்க, கார்பன் உமிழ்வைக் குறைப்பதற்கும் அகற்றுவதற்கும் அதன் முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த சுற்று கார்பன் பொருளாதார கட்டமைப்பை சவூதி அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த சவாலானது செப்டம்பர் 12, 2024 அன்று நிறைவடைகிறது, மேலும் பங்கேற்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் திட்டங்களை, யோசனைகளை சமர்ப்பிக்க கீழுள்ள இணையத்தை நாடலாம்: https://uplink.weforum.org/uplink/s/uplinkissue/a00TE000080E1a/carboncaptureandutilizationchallenge?activeTab=ChallengeOverview

**காலித் ரிஸ்வான்...**

# உலகத் தலைவர்கள் மீது சமீப காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சிகள்!



தற்போது உலகம் முழுவதும் பரபரப்பாகப் பேசப்படும் நிகழ்வு என்றால் அது அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூடுதான்.

அமெரிக்க ஜனாதிபதிகள் கொலை செய்யப்படுவது மற்றும் அவர்கள் மீதான கொலை முயற்சிகள் இது முதல் முறை அல்ல, ஏனெனில் ஆபிரஹாம் லிங்கன் முதல் ஜோன் F. கென்னடி வரை பல ஜனாதிபதிகள் அமெரிக்க வரலாற்றில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

உலகத் தலைவர்கள் மீதான படுகொலை முயற்சிகள், உலக நாடுகளையும், சமூகத்தையும் உலுக்கக் கூடிய கொடூரமான நிகழ்வுகளாகும். இந்தச் சம்பவங்கள் அரசியல் பிரமுகர்கள் எதிர்கொள்ளும் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் மற்றும் தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றன.


சமீபத்திய காலங்களில் உலகத் தலைவர்கள் மீது நடத்தப்பட்ட படுகொலை முயற்சிகள் சில உள்ளன. அவற்றை இங்கு பார்க்கலாம்.

★ ட்ரம்ப் ஜூலை 2024 இல் பென்சில்வேனியாவில் நடந்த பிரசாரப் பேரணியின் போது முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கொலை முயற்சியில் இருந்து தப்பியுள்ளார். 20 வயது இளைஞர் ஒருவர் துப்பாக்கிச் சூடு நடத்தினார். காதில் துப்பாக்கிச்சூடு பட்ட நிலையில் ட்ரம்ப் உயிர்தப்பியுள்ளார். இந்தத் தாக்குதலில், அருகில் இருந்த ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர். தாக்குதல் நடத்தியவர் சீக்ரட் சேவிஸ் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார். அரசியல் வன்முறைகள் ஒழிக்கப்பட வேண்டிய தன் அவசியத்தை வலியுறுத்தி உலகத் தலைவர்கள் பலரும் இந்த சம்பவத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

★ ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே 2022 ஜூலையில் ஜப்பானின் நாராவில் பிரசார உரை ஆற்றியபோது பரிதாபமாக படுகொலை செய்யப்பட்டார். தாக்குதல் நடத்தியவர் அவர் வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட துப்பாக்கியைப் பயன்படுத்தினார். சுடப்பட்ட சிறிது நேரத்திலேயே அபே மரணமடைந்தார். இச்சம்பவம் உலகையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. ஜப்பான் போன்ற கடுமையான துப்பாக்கி கட்டுப்பாடு சட்டங்களைக் கொண்ட நாடுகளில் கூட இப்படி ஒரு சம்பவம் நடந்துள்ளது.

★பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான், நவம்பர் 2022 இல் ஒரு படுகொலை முயற்சியில் இருந்து உயிர்தப்பினார். அரசியல் பேரணியின் போது, ஒரு மர்ம நபரால் அவர் காலில் சுடப்பட்டார். இம்ரான் கான் உடனடியாக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டார். பாகிஸ்தானின் கொந்தளிப்பான அரசியல் சூழலையும் அதன் தலைவர்கள் எதிர்கொள்ளும் தற்போதைய அபாயங்களையும் இந்தத் தாக்குதல் உலகத்திற்கே வெளிச்சம் போட்டுக் காட்டியது.







★ 2022 இல் உக்ரைன் மீது ரஷ்ய படையெடுப்பிற்குப் பிறகு உக்ரேனிய ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி பல படுகொலை முயற்சிகளை எதிர்கொண்டார். அவரது பாதுகாப்பு அமைப்பு அத்தனை முயற்சிகளையும் வெற்றிகரமாக முறியடித்து, அவரது பாதுகாப்பை உறுதி செய்துள்ளது. இந்தச் சம்பவங்கள், மோதல் சூழலில் தலைவர்களுக்கு அதிக ஆபத்துகள் இருப்பதையும், அவர்களைப் பாதுகாப்பதில் பாதுகாப்புப் படைகளின் முக்கிய பங்கையும் காட்டுகிறது.

★ வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ, ஓகஸ்ட் 2018 இல் இராணுவ அணிவகுப்பின் போது ட்ரோன் தாக்குதலில் இருந்து உயிர்தப்பினார். மதுரோ பேசிக் கொண்டிருந்த மேடைக்கு அருகே வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட ட்ரோன்கள் வெடித்தன. அவர் காயமின்றி தப்பித்தாலும், அத்தாக்குதலில் பல இராணுவ வீரர்கள் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் கொலை முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சியை பற்றி உலகை எச்சரிக்கிறது.

★மே 15, 2024 அன்று ஸ்லோவாக்கியாவின் பிரதமர் றொபர்ட் ஃபிகோ ஒரு படுகொலை முயற்சியில் படுகாயமடைந்தார். அரசாங்கக் கூட்டத்திற்குப் பிறகு ஃபிகோ கூட்டத்தை வாழ்த்திக் கொண்டிருந்த இடத்தில் இந்தத் தாக்குதல் நடந்தது. ஃபிகோவின் கொள்கைகளை எதிர்த்த 71 வயது முதியவர் அவரை பலமுறை சுட்டார். ஃபிகோவுக்கு அவசர அறுவை சிகிச்சை செய்யப்பட்டு பின்னர் குணமடைந்தார்.

★ஜப்பானிய பிரதமர் ஃபுமியோ கிஷிடா ஏப்ரல் 15, 2023 அன்று ஒரு படுகொலை முயற்சியில் இருந்து உயிர்தப்பினார். வகாயாமாவில் உள்ள சைகாசாகி மீன்பிடித் துறைமுகத்தில் ஒரு பிரசார நிகழ்வின் போது, கிஷிடா அருகே பைப் குண்டை ஒருவர் வீசினார். அவர் விரைவாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டார். அவருக்கு காயம் ஏற்படவில்லை. ஆனால் வெடிப்பில் மேலும் இருவர் காயமடைந்தனர். சந்தேக நபர் சம்பவ இடத்திலேயே கைது செய்யப்பட்டார்.

# உலகின் செல்வாக்கு பெற்ற தலைவர்களில் பிரதமர் நரேந்திர மோடி முதலிடத்தில்!



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அனைத்து சமூக வலைத்தளங்களிலும் பிரபலமாக உள்ளார். அவருடைய யூடியூப்பில் சுமார் 2.5 கோடிக்கும் மேற்பட்டோர் நரேந்திர மோடியைப் பின்தொடர்கின்றனர். இதன் மூலம் யூடியூப் சமூக வலைத்தளத்தில் செல்வாக்கு மிக்க தலைவர்கள் மத்தியில் பிரதமர் நரேந்திர மோடி முதலிடத்தில் உள்ளார்.

பேஸ்புக், வட்ஸ்அப், இன்ஸ்டகிராம் போன்றவற்றிலும் அவர் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்.

இந்தச் சூழலில் எக்ஸ் சமூக வலைத்தளத்தில் பிரதமர் நரேந்திர மோடியை பின்தொடர்வோர் எண்ணிக்கை 10 கோடியை தாண்டி உள்ளது. இதன் மூலம் எக்ஸ் தளத்தில் செல்வாக்கு மிக்க உலக தலைவர்களில் முதலிடம் பிடித்துள்ளார் மோடி.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை, எக்ஸ் தளத்தில் 3.81 கோடி பேர் பின்தொடர்கின்றனர். துபாய் மன்னர் ஷேக் முகமதுவை 1.12 கோடி பேரும், கத்தோலிக்க மதத்தலைவர் பரிசுத்த பாப்பரசரை 1.85 கோடி பேரும் பின்தொடர்கின்றனர்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தியை எக்ஸ் தளத்தில் 2.64 கோடி பேரும், டெல்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவாலை 2.75 கோடி பேரும், சமாஜ்வாதி தலைவர் அகிலேஷ் யாதவை 1.99 கோடி பேரும், மேற்குவங்க முதல்வர் மம்தாவை 74 இலட்சம் பேரும் பின்தொடர்கின்றனர்.

இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலியை 6.41 கோடி பேரும், பிரேசில் கால்பந்து வீரர் நெய்மரை 6.36 கோடி பேரும், அமெரிக்க கூடைப்பந்து வீரர் லீபிரோன் ஜேம்ஸை 5.29 கோடி பேரும், அமெரிக்க பொப் பாடகி டெய்லர் ஸ்விப்டை 9.53 கோடி பேரும் பின்தொடர்கின்றனர்.

இது குறித்து இந்தியப் பிரதமர் மோடி சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட பதிவில், "எக்ஸ் தளத்தில் 10 கோடி பேர் பின்தொடர்கின்றனர். இந்த தளத்தில் விவாதம், கருத்துகள், மக்களின் ஆசீர்வாதங்கள், ஆக்கபூர்வமான விமர்சனங்கள் முன்வைக்கப்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது. இவை வருங்காலத்திலும் தொடரும்" என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் எக்ஸ் தளத்தில் பிரதமர் நரேந்திர மோடியை 3 கோடி பேர் புதிதாக பின்தொடர்ந்துள்ளனர்.

உலக நாடுகளின் அரசியல் தலைவர்களில் அதிகம் செல்வாக்கு மிக்க தலைவராக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி திகழ்கின்றார் என்பது இதன் மூலம் உறுதியாகின்றது.

நரேந்திர தாமோதரதாஸ் மோடி செப்டம்பர் 17 1950 ஆம் ஆண்டு குஜராத்தில் உள்ள மேஹ்சானா மாவட்டத்தில் அமைந்துள்ள வத்நகரில் பிறந்தார். எந்த அரசியல் பின்னணியும் இல்லாத நடுத்தர வர்க்கக் குடும்பத்தைச் சேர்ந்த தாமோதர் தாஸ் முல்சந் மோடி_ ஹீராபேன் தம்பதியருக்கு 3 ஆவது மகனாகப் பிறந்தார் நரேந்திர மோடி. இத்தம்பதிக்கு 6 மகன்கள் உள்ளனர்.

பாடசாலைப் பருவத்திலேயே ஆர்.எஸ்.எஸ் மீது கொண்ட பற்று காரணமாக தனது 8 ஆவது வயதில் ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டார் மோடி.

குடும்பச் சூழல் காரணமாக தனது 20 வயதில் குஜராத்தின் மிகப்பெரிய நகரமான அகமதாபாத்துக்கு குடிபெயர்ந்தார். அதன் பின்னர் 1987 ஆம் ஆண்டு பா.ஜ.கவில் தன்னை இணைத்துக்கொண்டு அதில் உறுப்பினராகச் சேர்ந்து கட்சிப் பணியாற்றியுள்ளார். உறுப்பினாராகச் சேர்ந்த 1 வருட காலத்தில், குஜராத் மாநில பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டார். அதனையடுத்து சோம்நாத் முதல் அயோத்தி வரையிலான அத்வானியின் ரத யாத்திரை மற்றும் கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரையிலான யாத்திரைக்கான ஏற்பாடுகளை செய்யும் பொறுப்பு மோடிக்கு வழங்கப்பட்டது.

இதில் அவர் சிறப்பாக செயல்பட்டதை கவனித்த அன்றைய பா.ஜ.க தலைவரான அத்வானி, 1998ஆம் ஆண்டு இமாச்சல பிரதேசம் மற்றும் குஜராத்தில் நடந்த தேர்தல் பொறுப்பாளராக மோடியை நியமித்தார். அதன் பிறகு 1998 ஆம் ஆண்டு வாஜ்பாய் பிரதமராக பதவியேற்ற பொழுது, நரேந்திர மோடிக்கு 'தேசிய செயலாளர்' பதவியும் வழங்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து 2001ஆம் ஆண்டு குஜராத் முதல்வர் கேசுபாய் படேல் பதவி விலகியதை அடுத்து நடந்த இடைத்தேர்தலில் போட்டியிட்டு வென்ற மோடி, 2001, ஒக்டோபர் 7 ஆம் திகதி குஜராத் மாநிலத்தின் முதல்வராக பொறுப்பேற்றார். ஆனால், அடுத்த ஆண்டே ஒட்டுமொத்த நாட்டையே உலுக்கிய 'கோத்ரா ரயில் எரிப்பு' சம்பவத்திற்குப் பொறுப்பேற்று 2002 ஆம் ஆண்டு தனது பதவியை இராஜினாமா செய்தார். ஆனால், அதற்கு அடுத்த இடைத்தேர்தல் மற்றும் 2007, 2012 ஆகிய தேர்தல்களிலும் வெற்றி பெற்று 4 முறை குஜராத் மாநில முதல்வராக ஆட்சி செய்துள்ளார். ஒக்டோபர் 2001 முதல் மே 2014 வரையில் அவர் குஜராத் முதல்வராக இருந்ததால், குஜராத் மாநிலத்தில் மிக நீண்ட காலம் முதல்வராக இருந்தவர் என்ற பெருமையும் நரேந்திர மோடிக்கு உண்டு.

மோடியின் பா.ஜ. கட்சி 2014 இல் 282 இடங்களையும், 2019 தேர்தலில் 303 இடங்களையும் கைப்பற்றி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது. ஆனால் இந்த முறை 240 இடங்களை வென்று 272 பெரும்பான்மைக்கு 32 குறைவாக உள்ளது.

இந்தியாவின் வரலாற்றைப் பொறுத்த அளவில், 1947 தொடங்கி 1952 வரை சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக நேரு இருந்தார்.

1952 லோக்சபா தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் 1957 வரை இரண்டாவது முறையும் நேரு பிரதமராக பதவி வகித்தார்.

அடுத்து 1957 இல் நடந்த லோக்சபா தேர்தல்களிலும் நேரு வெற்றி பெற்றார். இறுதியாக 1964 ஆம் ஆண்டு மே மாதம் 27 ஆம் தேதி நேரு உயிரிழந்தார். அவர் மறையும் வரை பிரதமராகவே தொடர்ந்தார்.

இந்திரா காந்தியும் கூட 3 முறை பிரதமராக இருந்துள்ளார். ஆனால் நேருவைப் போல தொடர்ந்து இருந்ததில்லை.

1966 ஆம் ஆண்டு லால் பகதூர் சாஸ்திரியின் மறைவைத் தொடர்ந்து 1967 இல் நடைபெற்ற லோக்சபா தேர்தலில் வெற்றி பெற்று இந்திரா காந்தி பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன் பின்னர் 1971 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தார். 1971இல் இந்தியா_பாகிஸ்தான் போர் நடைபெற்றது. பின்னர் வங்கதேசம் உருவாக்கப்பட்டது. பின்னர் 1975 இல் அவசரகாலத்தை கொண்டு வந்தார். அப்போது நடந்த தேர்தலில் தோல்வியடைந்தார்.

இருப்பினும் அடுத்து வந்த பிரதமர்களின் ஆட்சிகள் கவிழ்ந்தன. இதனால் கடைசியாக 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பிரதமரானார்.

**10 கோடிக்கும் மேலானோர் பின்தொடர்கின்றனர்**

# 'இந்திய உச்ச நீதிமன்றில் தமிழ்'

## உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு வாழ்த்து



இந்திய உச்ச நீதிமன்றத்தில் நீதி அரசர் மகாதேவன், தமிழில் நெறியை பற்றியும், அரசனைப் பற்றியும் மேற்கோள் காட்டி தமிழ் மொழியில் பதவிப் பிரமாணம் எடுத்தது உலகத்திலுள்ள அனைத்து தமிழர்களுக்கும் பெருமையான விடயம்.

மக்கள் நம்புவது நீதிமன்றத்தைத் தான். அதனால் பதவிப்பிரமாணம் எடுக்கும் போது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படும் வகையில் அறநெறியை பற்றி மேற்கோள்காட்டி பதவிப் பிரமாணம் எடுத்தது உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு வாழ்த்துக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

## ஆந்திரா நீர்வேளாண்மை...

பார்வையிட்டார். இந்திய அதிகாரிகளின் வேண்டுகோளுக்கமைய அங்கு சென்று பார்வையிட்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மீன் குஞ்சுகள் பெருக்கம், அறுவடை மற்றும் ஏற்படக்கூடிய சவால்கள் தொடர்பாக அதிகாரிகளிடம் கேட்டறிந்து கொண்டார்.

## 120 மில்லியன் ரூபா...

மருந்துப் பொருட்களை சுகாதார அமைச்சுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளது. இதற்கான ஒப்பந்தம் கட்டார் தொண்டு நிறுவனத்துக்கும் சுகாதார அமைச்சுக்குமிடையே கைச்சாத்திடப்பட்டது.

குறிப்பாக Cardiovascular and Respiratory Diseases. நோய்களுக்காகவே இம்மருந்து பொருட்கள் கையளிக்கப்படவுள்ளன.

நிகழ்வில் சுகாதார அமைச்சர் டொக்டர் ரமேஸ் பத்திரன, அமைச்சின் செயலாளர் மஹிபால ஹேரத், பணிப்பாளர் டொக்டர் அசேல குணவர்த்தன, மற்றும் என்.ஜி.ஓ சஞ்சிவ விமல குணவர்த்தனவும் கலந்து கொண்டனர். நிகழ்வு சுகாதார அமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்றது. கட்டார் நாட்டின் இலங்கைக்கான பணிப்பாளர் மொஹமூத் அபு கலிபா, ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

அவர் அங்கு கருத்து தெரிவிக்கையில்

இலங்கையில் மேற்படி நோய்களிலிருந்து குணமடைவதற்காக கட்டார் சுகாதார திட்டம் மருந்துப் பொருட்களை வழங்குகின்றது. இந்த திட்டத்தினால் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்காக உதவுகின்றோம். குறிப்பாக இலங்கையில் 47,000 பேர் இந் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அவர்கள் எமது இச் சுகாதார திட்டத்தினால் நன்மையடைவரென எதிர்பாக்கின்றோம் என்றார்.

அமைச்சர் டொக்டர் ரமேஸ் பத்திரன உரையாற்றுகையில்,

கட்டார் நாட்டுக்கும் மக்களுக்கும் கட்டார் தூதரகம் மற்றும் தொண்டு நிறுவனத்துக்கும் இலங்கை மக்கள் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் சத்திரக் சிகிச்சை கூட படுக்கைகள் வெளிநோயாளர் படுக்கைகள் போன்ற தேவைகளையும் அவர் அங்கு சுட்டிக்காட்டினார்.

## சீனி, பால் மா,...

910 ரூபாவாகவும், ஒரு கிலோ கோதுமை மா 180 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளை சீனி 260 ரூபாவாகவும், ஒரு கிலோ வெள்ளை பச்சை அரிசி 200 ரூபாவாகவும், ஒரு கிலோ கீரி சம்பா அரிசி 258 ரூபாவாகவும் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச அறிவித்துள்ளது.

## அமைச்சர் ஜீவன்...

"இந்திய வீடமைப்பு திட்டம், நீர் கட்டண திருத்தம், சமகால அரசியல், கல்வி மற்றும் மலையக அபிவிருத்தி சார் விடயங்கள் தொடர்பாக இருவருக்கும் இடையில் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றன.

## விசேட தேவையுடையோர்...

பார்வையற்றோர் தங்கள் வாக்குச் சீட்டிலுள்ள அடையாளங்களை பிரெய்லி (Braille) எழுத்து முறையில் அடையாளம் காணும் அமைப்பு செயற்படுத்தப்பட்டுள்ளது. செவித்திறன் குறைபாடுள்ளவர்கள் சைகை மொழியில் அடையாளம் காணும் வகையில் சிறப்பு அமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது,

## 87,000 மாணவர்கள்...

கால அவகாசம் நேற்று (19) நள்ளிரவுடன் நிறைவடைந்ததாக அவர் கூறினார். பல்கலைக்கழக பட்டப்படிப்புகளுக்குரிய அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளை அடுத்த மாத இறுதிக்குள் அறிவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் பேராசிரியர் சந்தன உடவத்த மேலும் தெரிவித்தார்.

## இளைஞர்களே நாட்டின்...

எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். காலி வலஹன்துவ பிரதேசத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ருஹுணு பல்கலைக்கழகத்தின் புதிய சுகாதார விஞ்ஞான பீடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் (19) முற்பகல் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

பெயர் பலகையைத் திரைநீக்கம் செய்து விஞ்ஞான பீடத்தின் கட்டிடத்தை மாணவர்களுக்கு கையளித்த ஜனாதிபதி, கட்டிட வளாகத்தை மேற்பார்வையிட்டதன் பின்னர் பல்கலைக்கழக ஊழியர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடினார்.

ருஹுணு பல்கலைக்கழக உபவேந்தர் சுஜீவ அமரசேன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு நினைவுப் பரிசு ஒன்றையும் வழங்கி வைத்தார்.

இதன்போது விஞ்ஞான பீட மைதானத்தில் மரக்கன்று ஒன்றை நாட்டி வைத்த ஜனாதிபதி, பல்கலைக்கழக ஊழியர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

இந்நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

"அமைச்சர் ரமேஷ் பத்திரன இந்த இணை சுகாதார பீடத்தை திறந்து வைப்பதற்காக தன்னை அர்ப்பணித்தார். இந்தக் கட்டிடத்தை அனைவரும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அமெரிக்கா போன்ற பெரிய பல்கலைக்கழகங்கள் 24 மணி நேரமும் இத்தகைய கட்டிடங்களால் பயனடைகின்றன. அரசுப் பணம் கல்விக்காகப் பயன்படுத்தப்படும்போது, அதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த வகுப்புகள் சீர்குலைந்தால் உங்களுக்கும் நாட்டுக்கும் பாதிப்புகள் ஏற்படும்.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் அந்த கூட்டுதாபனத்துக்காக 700 பில்லியன் ரூபா செலவிடப்பட்டதாக இங்கு குறிப்பிடப்பட்டது. ஆனால் அந்த 700 பில்லியன் ரூபாவை பத்து மடங்காக பெருக்கிப் பார்க்க வேண்டும். இவ்வளவு பெரிய தொகையை செலவழித்ததன் விளைவாக மூன்று அரசாங்கங்களின் கீழ் இதனை ஈடுசெய்ய கடன் பெற நேரிட்டது. இதனால், நாட்டின் கடன் தொகை அதிகரித்தது.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த போது, முதலில் கடன் வாங்குவதை நிறுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது கடினமான பணியாகும். ஆனாலும் அதனை செய்ய வேண்டியிருந்தது. அதற்குப் பதிலாக, புதிய முறையில் பணத்தை தேடிக்கொள்ள வேண்டிய அவசியம் காணப்பட்டது. ஒவ்வொரு அரசாங்க நிறுவனமும் தங்களது சொந்த செலவுக்கான நிதியை ஈட்டிக்கொள்ள வேண்டுமென வலியுறுத்தினோம்.

இந்த நிலை அனைத்து துறைகளையும் பாதித்தது. என்னை திட்டித் தீர்த்தனர். நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைய அனுமதிப்பதா? அல்லது அவதூறுகளை ஏற்றுக் கொள்வதா ?என்பதை நான் தீர்மானிக்க வேண்டியிருந்தது. ஆனால் இந்தப் பொறுப்பில் இருந்து விலக முடியாத நிலைமை இருந்தது. அந்த செயற்பாடுகளுக்கு அனைத்து அமைச்சர்களும் ஆதரவு வழங்கினர்.

அப்போது, அரச நிறுவன மறுசீரமைப்பு திட்டத்துக்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்தனர். இன்று நாட்டின் மின் மற்றும் எரிபொருள் கட்டணங்கள் உலக சந்தையின் விலைக்கு அமைவாக உள்ளன. மேலும், ஏனைய கூட்டுத்தாபனங்களுக்கும் பணம் வழங்குவதை நிறுத்தினர். நாங்கள் தற்போது ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு மட்டுமே பணம் செலுத்த வேண்டியுள்ளது. இந்த ஆண்டு இறுதிக்குள், அந்த கட்டண நடவடிக்கைகளிலிருந்து விடுபட அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அதனால் மீதமாகும் தொகையை நாட்டின் கல்வி மற்றும் சுகாதாரத்துக்காக பயன்படுத்த முடியும்.

இந்த நடவடிக்கைகளை செயல்படுத்தும் போது பல விமர்சனங்கள் எழுந்தன. அப்போது, நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களை நமது தேசிய சொத்தாக கருதுவதா? அல்லது இளைஞர்களை தேசிய சொத்தாக கருதுவதா? என்ற கேள்வி எழுந்தது. நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களைப் பாதுகாப்பதா? அல்லது கல்வி மற்றும் சுகாதாரத்துக்கு பணம் கொடுப்பதா? என்பதை முடிவு செய்ய வேண்டும். இந்த புதிய வேலைத் திட்டங்கள் மூலம் அடுத்த இரண்டு அல்லது மூன்று வருடங்களில் புதிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்தி நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல ஒன்றுபடுமாறு அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறேன்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## புலிகள் பாடசாலைகளை...

நலன்களுக்காக 10,000 பாடசாலைகளை மூடுவது வீரமாக கருதுகின்றனரென தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்துக்கான ஜயகமு ஸ்ரீலங்கா மக்கள் நடமாடும் சேவையின் அங்குரார்ப்பண நிகழ்வு (18) மத்துகம பொது விளையாட்டரங்கில் அமைச்சர் தலைமையில் நடைபெற்றது. இங்கு தொடர்ந்தும் பேசிய அமைச்சர்,

வடக்கில் விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பாக இருந்து 30 வருடங்களாக யுத்தம் இடம்பெற்ற போதும் பாடசாலைகளை மூட அனுமதிக்கவில்லை. ஆசிரியர்கள் வடிகால்களை வெட்டி பீப்பாய்களுக்குள் வைத்து குழந்தைகளுக்கு கற்பித்தனர்.

தற்போதைய சூழலில் ஆசிரியர்களாகவும் தெய்வங்களாகவும் கருதப்பட்ட ஆசிரியர்களின் கௌரமும் மரியாதையும் கெட்டுவிட்டது.

பாடசாலைக்குச் சென்றிடாத அகில இலங்கை ஆசிரியர் சங்கங்களின் தலைவர் ஸ்டாலின், மஹிந்த ஜயசிங்கவின் அரசியல் நலன்களுக்காக கௌரவமான அதிபர்களையும் ஆசிரியர்களையும் பயன்படுத்தி இலவசக் கல்விக்கு பாரிய களங்கத்தை ஏற்படுத்தியுள்ளனர்.

நாட்டில் 10,000 பாடசாலைகளை மூடியதுதான் இவர்களின் செயற்திறமையாகும் .

## யாழ்ப்பாணத்து மக்களுக்காக...

அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை என்ற வைத்தியசாலை இல்லாதது போல அரசியல்வாதிகள் அமைச்சரிடம் பேசும் போது நாம் பேசி பயனில்லை எனவும் கவலை வெளியிட்டார். சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரத்தில் நீடித்து வந்த சர்ச்சைகளுக்கு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன இப்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளார். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனாவின் ஊடகவியலாளர் சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (19) நடைபெற்றது.

இதன் போது இராமநாதன் அர்ச்சுனா மேலும் தெரிவிக்கையில்,

ஒரு வைத்தியருக்காக பொதுமக்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டது உலக வரலாற்றில் இதுவே முதல் முறை.

தென்மராட்சி மக்களுக்கு நான் எப்போதும் விசுவாசமாக இருப்பேன். இந்த மக்களின் அன்பு என்பது எனது இதயத் துடிப்பு. இந்த மண்ணில் இருந்து விடைபெறுகின்றேன். சுகாதார அமைச்சிற்கு வருமாறு நேற்று முன்தின திகதியிட்டு நேற்று எனக்கு கடிதம் கிடைத்துவிட்டது.

கொழும்பு சென்று இன்று அங்கு புதிய நியமனத்தைப் பெற்றுக் கொண்டு நான் முன்னர் கடமையாற்றிய பேராதனை வைத்தியசாலைக்குச் சென்று கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளேன் என்றார்.

## மின் கட்டண குறைவின்...

கட்டணம் 25 வீதம் குறைக்கப்பட்டுள்ளது.இதன் மூலமான பலன்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்க தமது சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுவருவதாக தெரிவித்தார்.

புதிய மின் கட்டண திருத்தத்தின் மூலம் அரிசி உற்பத்திச் செலவு குறைக்கப்பட்டுள்ளதாகவும், அடுத்த வாரத்திற்குள் அதன் பலன்கள் நுகர்வோருக்கு வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

'210 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்ட ஒரு கிலோ நாட்டு அரிசியின் விலை 195 ரூபா அல்லது 200 ரூபாவிற்கும் குறைவான விலையில் நுகர்வோருக்கு வழங்கக்கூடியதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மின்சாரக் கட்டணம் மேலும் குறைக்கப்பட்டால், எதிர்காலத்தில் அதன் பலன்கள் வாடிக்கையாளர்களுக்குக் வழங்கப்படும் ' என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, கீரி சம்பா விலையை மாபியா கட்டுப்படுத்திவருவதாக தெரியவந்துள்ளது.

தற்போது நெல் அறுவடை கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், நெல்லின் விலை படிப்படியாகக் குறைந்து வருவதாகவும் சங்கத்தின் தலைவர் யு.கே. சேமசிங்க மேலும் தெரிவித்தார்.

அதற்கமைவாக நாடு, சம்பா மற்றும் கீரி சம்பா முதலான நெல் கொள்முதல் சம விலையில் இடம்பெறுவதாகவும் , கீரி சம்பா, சம்பா நெல் கொள்வனவு ரூபா 110க்கும் 109க்கும் இடையில் வீழ்ச்சியடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இதற்கு விளக்கமளிக்கும் வகையில் சிறிய மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள், சந்தையில் கீரி சம்பா அரிசியின் விலை இன்னும் ரூ. 350க்கு மேல் விற்கப்படுவதாக தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் நுகர்வோர் அதிகாரசபை தலையிட வேண்டும் என சங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் யு.கே. சேமசிங்க மேலும் தெரிவித்தார்.

சந்தையில் ஒரு கிலோ கீரி சம்பா விற்பனை செய்யக்கூடிய அதிகபட்ச விலையாக 260 ரூபா கட்டுப்பாட்டு விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ள போதிலும் ,அதன் பலன் நுகர்வோருக்கு கிடைக்கவில்லை என சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

# இன்றைய பலன்கள் (20.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா (ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்** : பொதுவாழ்வில் இருப்பவர்கள் நிதானமாக செயல்படுவது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்கள் கணக்கு வழக்குகளில் கவனமாக இருக்க வேண்டும்.

**ரிஷபம்** : எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு போட்டிகளுக்கு மத்தியில் வெற்றி கிடைக்கும்.

**மிதுனம்** : ஆதாயம் தரும் தகவல் கிடைக்கும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் ஆதரவு பெருகும்.

**கடகம்** : வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு எதிர்பார்த்த இலக்கை அடைய முடியாது. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சக பணியாளர்களால் பிரச்சனைகள் வரலாம்.

**சிம்மம்** : பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு ஓய்வில்லாமல் உழைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

**கன்னி** : பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். வியாபாரம் தொழில் செய்பவர்கள் எதிர்பார்த்த இலக்கை அடைவர்.

**துலாம்** : பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு பிறருக்கு பொறுப்புச் சொல்வதால் பிரச்சினைகள் வரலாம். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு வேண்டிய முதலீடுகள் கிடைக்கும்.

**விருச்சிகம்** : பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முன்னேற்ற பாதையை நோக்கி அடியெடுத்த வைப்பர். வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு கணிசமான தொகைகைகளில் புரளும்.

**தனுசு** : வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு ஆலோசனை கைகொடுக்கும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயர் மட்ட அதிகாரிகளால் நன்மை கிடைக்கும்.

**மகரம்** : விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து இணைவர். தொழில் சீராக நடைபெறும். பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு முக்கிய பிரமுகர்களின் சந்திப்பால் முன்னேற்றம் கிடைக்கும்.

**கும்பம்** : பொழுது பொது வாழ்வில் உள்ளவர்களுக்கு புது முயற்சிகளை யோசித்து செய்வது நல்லது. வியாபாரம் தொழில் செய்பவர்களுக்கு தொழில் போட்டி அதிகரிக்கும்.

**மீனம்** : தன விரயம் அதிகரிக்கும். அதனால் பொது உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு உயிர் அதிகாரிகள் முக்கியத்துவம் கொடுப்பர்.

## வடமத்திய மாகாணத்துக்குள்... (03ஆம் பக்கத் தொடர்)

சில ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பாடசாலையில் கற்பித்தல் பணியை சரிவர செய்யாததுடன், தங்களின் தனிப்பட்ட உதவி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளுக்குச் செல்லாத பிள்ளைகளை உதாசீனப்படுத்துவதுடன், பாடசாலையில் பல்வேறு உடல் மற்றும் மன உபாதைகளுக்கும், துன்பங்களுக்கும் உள்ளாக்கப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, வடமத்திய மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களிடம் பணம் வசூலிப்பதும், பாடசாலை நேரத்திலோ, பாடசாலை நேரத்துக்குப் பின்னரோ அல்லது வார இறுதி நாட்களிலோ தனியார் பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களை பின்பற்றாத ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அதிபர்களுக்கு எதிராக கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென வடமத்திய மாகாண முதலமைச்சர் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட சுற்று நிருபத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஹிங்குராக்கொட உள்ளூர்... (03ஆம் பக்கத் தொடர்)

நிர்மாணப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற வைபவத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா கருத்துதெரிவிக்கையில்,

இந்த விமான நிலையத்தை நவீனமயப்படுத்துவதன் ஊடாக எதிர்காலத்தில் சர்வதேச விமான நிலையமாக மாற்றம்செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் 02 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாகவும், அதன்படி ஒவ்வொரு வருடமும் ஹிங்குராக்கொட விமான நிலையத்தை நிர்மாணிப்பதற்காக வரவு செலவுத் திட்டம் ஊடாக நிதி வழங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்: மத்தள, கட்டுநாயக்க, இரத்மலானை மற்றும் பலாலி விமான நிலையங்களையும் ஹிங்குராக்கொட விமான நிலையத்தையும் சிவில் விமான நிலையங்களாக இயக்குவதே எமது இறுதி இலக்காகுமென்றும்தெரிவித்தார்.

## கோழி இறைச்சி, முட்டை,... (03ஆம் பக்கத் தொடர்)

இதற்கமைய அன்னாசிப்பழ உற்பத்தியாளர்கள் மற்றும் கோழி இறைச்சி உற்பத்தியாளர்கள் சீன சந்தைக்கு கோழி இறைச்சி, முட்டை மற்றும் அன்னாசிப் பழங்களை ஏற்றுமதி செய்ய அனுமதி கிடைத்துள்ளது

## பேராதனை பல்கலையின்...

பல்கலைக்கழகச் சட்டத்தின் 34 (1) (அ) பிரிவுக்குமைய 2024 ஓகஸ்ட் 01 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் மூன்று வருட காலத்துக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## வெளியிடப்படும் அடிப்படையற்ற... (03ஆம் பக்கத் தொடர்)

ஜனாதிபதி ஊடக மையத்தில் (18) நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய இதனை தெரிவித்தார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்:

"ஜனாதிபதித் தேர்தல் என்பது மக்களின் ஜனநாயக முடிவுகளில் மிகவும் வலுவான முடிவாக அமையும் என்பதை நாம் அறிவோம். இவ்வாறான வேளையில் இரண்டு வருடங்களுக்கு முன்பிருந்த நாட்டின் நிலைமையையும் இன்றைய நிலைமையையும் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான களமொன்று அமைக்கப்பட வேண்டும். மக்களின் பாதுகாப்பு, நலன் மற்றும் மேம்பாடு என்பன அரசாங்கத்தின் பொறுப்பாகும். எனவே, இந்த இக்கட்டான காலகட்டத்தில் பகிரங்க விவாதங்களுக்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

அத்துடன் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் நாட்டை மீட்பதற்கான சவாலை ஏற்றுக்கொண்ட தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த இரண்டு வருடங்களில் செய்த சாதகமான விடயங்கள் மூலம் நாட்டை சரியான பாதைக்கு கொண்டு வர முடிந்தது.

இது தொடர்பாக எதிர்மறையான கருத்துக்களை முன்வைக்கும் எதிர்க்கட்சி எம்.பி.க்களும் பொருளாதார ஆய்வு நிறுவனங்களின் நிபுணர்களை பொது மேடையில் பகிரங்க விவாதத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கிறேன்.

கடந்த பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக ஜனாதிபதி மேற்கொண்டுள்ள சாதகமான நடவடிக்கைகளை விரிவாக தெளிவுபடுத்த நிதி இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் நான் தயாராக உள்ளேன். அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் நிதியமைச்சர் என்ற வகையில், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான புதிய கடன் திட்டம் இன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடனின் கீழ் 7% சலுகை வட்டியுடன் இந்தக் கடன் வழங்கப்படவுள்ளது. இதற்காக 50 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சிறு, மத்திய தரத்திலான தொழில்களை வலுப்படுத்துவதே இதன் பிரதான நோக்கமாகும். இதன் கீழ், அதிகபட்சமாக 10 மில்லியன் ரூபாவிற்கு உட்பட்ட கடனைப் பெற முடியும். அத்துடன் சிறிய தேயிலை தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு 06 பில்லியன் ரூபா வழங்கப்படவுள்ளது. பெண் தொழில் முயற்சியாளர்களுக்கு 02 பில்லியன் ரூபா வழங்கப்படும்.

கடன் உத்தரவாத நிறுவனம் ஒன்றின் தேவை காணப்படுகிறது. அந்த கடன் மூலம், எதிர்வரும் ஒக்டோபரில் கடன் உத்தரவாத நிறுவனம் ஆரம்பிக்கப்படவுள்ளது. கடனுக்கான பிணையொன்றை வைக்க முடியாத வேளையில் கடன் உத்தரவாத நிறுவனம் அதற்கான உதவிகளை வழங்கும்.

அத்துடன் வாகன இறக்குமதியில் பாதிக்கப்பட்டுள்ள அனைத்து துறைகள் தொடர்பிலும் ஆராய விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் முதல் அமர்வு ஜூலை முதல் வாரத்தில் நடைபெற்றது. இதன்படி ஒகஸ்ட் மாதம் இரண்டாவது வாரத்தில் அமைச்சரவையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படும். பின்னர் வாகனங்களை எப்படி இறக்குமதி செய்வது என்பது குறித்து முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படும்.

அத்துடன், சுங்க பரிசோதகர்கள் ஆட்சேர்ப்புக்கான பரீட்சை முடிவுகள் தற்போது வெளியாகியுள்ளன. நேர்முகப் பரீட்சை ஜூலை 26 27 ஆம் திகதிகளில் நடைபெற உள்ளது. மேலும் உதவி சுங்க அத்தியட்சகர்களுக்கான ஆட்சேர்ப்பு முடிவுகள் இந்த வாரம் வெளியாகும். இந்த ஆட்சேர்ப்பு வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுகிறது.'' என்று தெரிவித்தார்.

## வளர்ச்சியடைந்து வரும்... (03ஆம் பக்கத் தொடர்)

இங்கு மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"முச்சக்கர வண்டிகளே மக்களின் பிரதான போக்குவரத்து சாதனமாக மாறியுள்ளது. ஒரு புறத்தில் விவசாயம் செய்யும் அதேநேரம், மறுபுறம் முச்சக்கர வண்டிகளை ஓட்டி வருமானம் ஈட்டுகின்றனர். 20222023 ஆண்டு சிறு போகத்தில் நல்ல அறுவடை கிடைத்தது. அதன் பிறகு, பெரும்போகத்திலும் நல்ல விளைச்சலைப் பெற முடிந்தது. அதற்கேற்ப விவசாயிகளின் கைகளுக்குப் பணம் வரத் தொடங்கியது. விவசாயிகளின் வர்த்தகம் வளர்ச்சியடைந்ததால், போக்குவரத்துச் செயற்பாடுகளும் அதிகரித்தன.

2023 இல் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வரத் தொடங்கினர். சுற்றுலாப் பயணிகளின் வருகையால் முச்சக்கரவண்டி சாரதிகளின் பொருளாதாரம் உயர்ந்தது. ஒருபுறம், விவசாயிகளின் விளைச்சல் செயற்பாடுகளுக்கு உதவும் அதேநேரம் முச்சக்கர வண்டி சாரதிகள் சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்துத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றனர்.

இவ்விரு துறைகள் மூலம் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வலுப்பெறத் தொடங்கியது. இந்த பொருளாதார வளர்ச்சியினால் தான் இரண்டு வருடங்கள் முடிவதற்குள் எமது நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்க முடிந்தது. வேறு எந்தவொரு நாடும் இவ்வளவு குறுகிய காலத்தில் வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு வந்ததில்லை. ஆனால் நாம் வங்குரோத்து நிலையிலிருந்து நாட்டை மீட்டிருப்பதோடு, 08 பில்லியன் டொலர் கடன் நிவாரணத்தையும் பெற்றிருக்கிறோம்.

இன்று நாடு ஓரளவு ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது. நாம் இங்கிருந்து முன்னேறிச் செல்ல வேண்டும். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் வீழ்ச்சியடையாமல் முன்னெடுத்துச் செல்ல வேறு வழிகள் உள்ளதா? என்பது குறித்து நாம் அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

குறிப்பாக முச்சக்கர வண்டி சாரதிகளின் தொழில் சார் முன்னேற்றுக்கான பரிந்துரைகள் இங்கு முன்வைக்கப்பட்டன. அந்த முன்மொழிவுகளை நாம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த திட்டங்களை செயல்படுத்தும் போது இத்தொழில் தொடர்பான சங்கங்களுடன் கலந்தாலோசிக்க வேண்டும். இந்த தொழில்சார் சட்டங்கள் தேவைப்படும் என்பதை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதனை செய்ய வேண்டிய முறைமை தொடர்பில் நீங்கள் தீர்மானிக்கலாம். நலன்புரிச் செயற்பாடுகள் குறித்தும் கனவம் கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில், குறிப்பாக காலநிலை மாற்றத்தினால் மின்சார வாகனங்கள் குறித்து கவனம் செலுத்தும்போது, தற்போதுள்ள இந்த வாகனங்களுக்கு என்ன வகையான நிவாரணம் வழங்கப்படுகிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதற்கான முயற்சிகள் அனைத்தும் உலகில் இன்னும் ஆரம்ப கட்டத்திலேயே உள்ளன. இது தொடர்பாக உலக நாடுகள் ஆய்வுகளில் ஈடுபட்டுள்ளன. உலக நாடுகளைப் பின்பற்றிச் செயலாற்ற வேண்டியதும் அவசியமாகிறது.

அத்துடன், நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேவை. முதலீடுகள் ஊக்குவிப்பதன் மூலம் வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதுடன் ஏற்றுமதியையும் அதிகரிக்க முடியும். ஆனால் பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் வேளையில் கடந்த கால நெருக்கடியில் பாதிக்கப்பட்ட மக்களை நாம் மறந்துவிடக் கூடாது.

இந்த பொருளாதார வளர்ச்சியின் பலன்களை இந்த நாட்டின் சாதாரண மக்களுக்கு வழங்குவதே எனது பிரதான நோக்கமாக அமைந்துள்ளது. அந்த மக்களுக்காக, ஆறுதல் திட்டத்தை செயல்படுத்தினோம். அங்கு, நலத்திட்ட உதவிகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை, மூன்று மடங்காக உயர்த்தப்பட்டு, பயனாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தது.

கடந்த புத்தாண்டு காலத்தில் மக்களுக்கு இரண்டு மாதங்களுக்கு 10 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. அத்துடன் இலவச காணி உரிமையை வழங்க உறுமய வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நகரில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு, அவர்கள் வசிக்கும் வீடுகளின் உரிமையை வழங்க ஆரம்பித்துள்ளோம். மேலும், பெருந்தோட்ட பிரதேசங்களை கிராமங்களாக மாற்றும் திட்டங்களும் உள்ளன. இந்தப் பணிகள் அனைத்தும் இந்நாட்டின் சாதாரண மக்களின் மேம்பாட்டை கருத்தில் கொண்டு ஆர்ம்பிக்கப்பட்டவையாகும்.

உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் இருந்து பெரிய அளவிலான முதலீட்டாளர்களை நாட்டில் புதிய முதலீடுகளுக்கு அழைக்கிறோம். கடந்த பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட சிறு, நடுத்தர வர்த்தகர்கள் உள்ளிட்ட சாதாரண மக்களை முன்னேற்றும் திட்டத்தையும் செயல்படுத்தியுள்ளோம்.

நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றும் போது முச்சக்கரவண்டி சாரதிகளையும் நாம் மறந்துவிடவில்லை. இந்த பொருளாதார முறையை கைவிட்டால் என்ன நடக்கும்? கடன் நிபந்தனைகள் மீறப்பட்டால் என்ன நடக்கும்? என்பதை பற்றியும் சிந்திக்க வேண்டும். இன்று ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்துள்ளோம். நாம் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டுமானால், சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்ந்து செயல்பட வேண்டும். இதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும்." என்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் பிரேமநாத் சி. தொலவத்த, ஒன்றிணைந்த முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கத்தின் ஆலோசகர் மஹிந்த கஹந்தகம, ஐக்கிய பயணிகள் போக்குவரத்து சேவை தொழிலாளர்கள் சங்கத்தின் செயலாளர் ரஹ்மான், தேசிய ஒன்றிணைந்த முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் தொழில்துறையினர் சங்கத்தின் ரொஹான் பெரேரா மற்றும் போக்குவரத்து சங்கங்களின் பிரதிநிதிகள், முச்சக்கர வண்டி சாரதிகள் உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# கிழக்கின் குரல்



# ஜனாதிபதியின் கல்விக் கொள்கை சகலருக்கும் உயர்தரத்தை கற்பதற்கான வாய்ப்பை வழங்குகின்றது

(அம்பாறை மத்திய தினகரன் நிருபர்)



ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவின் கல்விக் கொள்கையானது சகலருக்கும் உயர்தரத்தை கற்பதற்கான வாய்ப்பை வழங்கியுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

கல்முனையில் நடைபெற்ற பாடசாலை நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பாராளுமன்ற உறுப்பினராகவிருந்து மக்களுக்கு சேவை செய்ய வேண்டிய அவசியத்தையும், வடகிழக்கு மக்களுக்கு தேவையான அபிவிருத்தி விடயங்களையும் அவருக்கு விளக்கினேன். அவற்றை உணர்ந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. மக்களுக்கு சேவை செய்ய எனக்கு நிதி வழங்கியிருக்கிறார். அதை கொண்டு பாடசாலைகள், பள்ளிவாசல்கள், பொது நிறுவனங்கள், பிரதேச உட்கட்டமைப்பை மேம்படுத்தி வருகிறேன்.

இந்த நிதி எனது சொந்த தேவைகளுக்கு தரப்பட்டதல்ல. எனது பிரதேச அபிவிருத்தி பணிகளுக்கு தரப்பட்டவை. இதனைக் கண்டு பல அரசியல்வாதிகள் பொறாமை கொள்கின்றனர். எனக்கும் ஜனாதிபதிக்கும் உள்ள தொடர்பு என்ன என்று அரசியல்வாதிகள் சிலர் கேள்வி எழுப்ப தொடங்கி விட்டார்கள். நான் படிக்கும் காலங்களில் பல்கலைக்கழகம் என்பதும் பட்டங்கள் பெறுவது என்பதும் பல மாணவர்களுக்கு எட்டாக் கனியாக இருந்தது. ஒரு காலத்தில் உயர்தர பரீட்சையில் போதியளவு சித்தியடையாவிட்டால் அல்லது பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படாவிட்டால் கூலி தொழிலுக்கு செல்கின்ற காலம் இருந்தது.

ஆனால் இப்போது இருக்கின்ற அரசாங்கத்தினதும், எமது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினதும் கல்விக் கொள்கையானது உயர்தரத்தில் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்படாவிட்டாலும் அந்த மாணவன் தனியார் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்று மேற்படிப்பை பூர்த்தி செய்யக் கூடிய வழிவகைகள் அத்தனையும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. தனது பட்டப்படிப்பை மேற்கொள்ள போதியளவு பணம் இல்லாதவர்களும் பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பை இன்று ரணில் விக்கிரமசிங்க வங்கிகளூடாக உருவாக்கியுள்ளார்.

இளைஞர், யுவதிகளுக்கான வாய்ப்புகள் இலங்கையில் பரந்து காணப்படுகின்றன. ஒவ்வொருவரும் தமக்கு பிடித்த துறைகளில் மேற்படிப்புகளை கற்றுக் கொள்ளலாம். எல்லாத்துறைகளிலும் இப்போது நிறைய சம்பாதிக்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

அண்மையில் அம்பானி வீட்டில் பாட்டுப்பாடியவரே சில நிமிடங்களுக்கு பல கோடி ரூபாக்களை சம்பளமாக பெற்றுள்ளார். தற்போது பாராளுமன்ற உறுப்பினராகவிருக்கும் நானும் உயர்தரத்தில் கலைத் துறையில் படித்தவன். பின்னர் பல்கலைக்கழகத்தில் சட்ட பீடத்தில் கற்று இப்போது சட்டத்தரணியாக இருக்கிறேன்.

துரதிஷ்டவசமாக பெருந்தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப் மூலமாக நான் அரசியலுக்குள் நுழைந்தேன். எனவே நீங்களும் உங்களுக்கு பிடித்த துறையை படித்து அதில் ஒரு நல்ல இடத்தை பெற்றுக் கொள்ளுங்கள். நாட்டினுடைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு கல்விமான் என்பதனால் அவருக்கு கல்வியின் அவசியம் தெரிகிறது. அதனால் கல்வியை மேம்படுத்த இவ்வாறான வேலைத்திட்டங்களை செய்கிறார்.

நீங்களும் உங்களுக்கு விருப்பமான துறையை தெரிவுசெய்து அதில் முழு கவனத்தையும் செலுத்தினால் அது அடுத்த கட்டத்திற்கு கொண்டு செல்லும். உலகில் சிறந்த பாடகர்கள் இருக்கிறார்கள். சிறந்த கிரிக்கெட் வீரர்கள் இருக்கிறார்கள். இதுபோல பல துறைகளிலும் பிரகாசிக்கும் பலரும் இருக்கிறார்கள். அவர்கள் ஆசைப்பட்ட துறையில் சென்றதால் அவர்கள் நல்ல இடத்தை அடைந்திருக்கிறார்கள். வாழ்க்கையில் மிக முக்கியமானது நம்பிக்கை. எனவே முயற்சி என்பதை நீங்கள் எப்போதும் வைத்துக் கொள்ளுங்கள் என்றார்.

## அனைத்து விளையாட்டுக் கழக சம்மேளனத்தின் புதிய தலைவராக எம்.எல். றபீக் தெரிவு

(மாளிகைக்காடு குறுப் நிருபர்)



நிந்தவூர் அனைத்து விளையாட்டுக் கழக சம்மேளன பொதுக்கூட்டத்தில் புதிய தலைவராக நிந்தவூர் கெண்ட் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.எல்.றபீக் தெரிவு செய்யப்பட்டார். புதிய செயலாளராக நிந்தவூர் மினா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் கே.எம் சாபிர், புதிய பொருளாளராக நிந்தவூர் எமெரல்ட் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.சீ.எம் றிபாய் ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புதிய துணை தலைவராக நிந்தவூர் சதாம் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் எம்.எஸ்.எம்.றஸீன் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## சட்டவிரோத மதுபாவனை விற்பனையில் ஈடுபட்ட பெண் கைது

(தம்பலகாமம் குறுப் நிருபர்)

மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சேனையூர் பகுதியில் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய குடும்பப் பெண்ணொருவர் நேற்று முன்தினம் (18) மாலை கைது செய்யப்பட்டதாக மூதூர் பொலிஸார் தெரிவித்தனர்.

சேனையூர் பகுதியை சேர்ந்த 42 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதுதொடர்பில் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பிலேயே விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த ஆறு பியர் டின்கள், 2 போத்தல்கள், கசிப்பு 750 மில்லிலீற்றர் என்பன கைப்பற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோத மதுபாவனை உற்பத்தி, அனுமதியற்ற விற்பனை போன்ற குற்றச்சாட்டின் கீழ் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணை மூதூர் நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கை

மாளிகைக்காடு குறுப் நிருபர்)

நெற்பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலங்களில், இடைப்போகத்தில் பச்சைப் பயறு பயிர்ச்செய்கையை மேற்கொள்ள அம்பாறை மாவட்ட விவசாய விரிவாக்கல் பிரிவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

நீர்ப்பாசன வசதியின்மையால், சிறுபோகத்தில் நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட முடியாத மேட்டு நிலங்களில் மேலதிக பயிராக பச்சைப் பயரை பயிரிடும் போது விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அதற்கான உதவிகளையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாக விவசாய திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

பச்சைப் பயறு அறுவடையின் பின்னர் அதற்கான சிறந்த சந்தை வாய்ப்பையும் விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான வசதிகளையும் விவசாய திணைக்கள் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## மாவடியில் வேட்டைத் திருவிழா



காரைதீவு மாவடி ஸ்ரீ கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடிமஹோற்சவத்தின் 13ஆம் நாளாகிய நேற்றுமுன்தினம் மிருகயாத்திரை எனப்படும் திருவேட்டை திருவிழா ஆலய வெளி வீதியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படம்.

## சுவாமி விபுலானந்த அடிகளாரின் 77 ஆவது மகாசமாதி தின நிகழ்வு

(காரைதீவு குறுப் நிருபர்)



உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் 77 ஆவது மகா சமாதி தின நிகழ்வும், அடிகளாரின் துறவற நூற்றாண்டு விழாவும் பதாகை திரை நீக்க திறப்பு விழாவும் நேற்று வெள்ளிக்கிழமை காலை அவர் அவதரித்த காரைதீவில் மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

காரைதீவு விபுலாநந்தர் ஞாபகார்த்தப் பணி மன்றத்தினர் இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு இந்நிகழ்வை ஏற்பாடு செய்தனர்.

முன்னதாக காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியிலிருந்து சுவாமிகளின் திருவுருவச் சிலை தாங்கிய மாணவர்களின் ஊர்வலம் கண்ணகை அம்மன் ஆலயம் வரை நடைபெற்றது. கண்ணகை அம்மன் ஆலய முச்சந்தியில் அடிகளாரின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து பின்னர் துறவற நூற்றாண்டு விழா தின பதாகை திரை நீக்க திறப்பு விழாவும் நடைபெற்றது. பிரதம அதிதியான அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன் சிறப்பு அதிதியான காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி ராகுலநாயகி சஜிந்ரன் உள்ளிட்ட அதிதிகள் கலந்து கொண்டு சுபவேளையில் பதாகையை திறந்து வைத்தார்.

சுவாமிகளின் 'வெள்ளை நிற மல்லிகையோ' என்ற பாடல் இசைக்க ,அதிதிகளால் சுவாமிகளின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டன.

இது சுவாமி பிறந்த காரைதீவு மண்ணில் நிறுவப்படும் துறவற நூற்றாண்டு விழாவின் முதலாவது பாதையாகும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அநிருத்தனனின் வழிகாட்டலில் இந்நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

சிலை திறப்பு விழாவின் பின்னர், அங்கிருந்து அதிதிகள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரமுகர்கள் ஊர்வலமாக சுவாமி விபுலாநந்தர் மணி மண்டபத்தை அடைந்ததும், அங்கு பணி மன்றத்தின் தலைவர் சோ.சுரநுதன் தலைமையில் 77 ஆவது ஆண்டு மகா சமாதி தின வைபவம் ஆரம்பமாகியது. அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக காரைதீவு பிரதேச சபை செயலாளர் அ.சுந்தரகுமார், சம்மாந்துறை வலய உதவி கல்வி பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா உள்ளிட்ட அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

## அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி கல்வியாண்டுக்கான புதிய பதிவுகள்

(ஒலுவில் விசேட நிருபர்)

அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரிக்கு 2024/2025ம் கல்வியாண்டுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள புதிய பயிலுனர்களுக்கான பதிவுகள் எதிர்வரும் திங்கட்கிழமை (22) நடைபெறவுள்ளதாக, அட்டாளைச்சேனை தேசிய கல்விக் கல்லூரியின் பீடாதிபதி கே. புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

புதிய பயிலுனர்களுக்கான 03 வாரகால திசைமுகப்படுத்தல் பயிற்சி செயலமர்வு நிகழ்ச்சித் திட்டத்தைத் தொடர்ந்து கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார். ஆரம்ப நெறி கற்கை நெறிக்கு 80 பயிலுனர்களும், கணிதக் கற்கை நெறிக்கு 23 பயிலுனர்களும், இஸ்லாம் பாட கற்கை நெறிக்கு 40 பயிலுனர்களும், விஞ்ஞானக் கற்கை நெறிக்கு 25 பயிலுனர்களும், விசேட கல்வி கற்கை நெறிக்கு 10 பயிலுனர்களும், வர்த்தகம் மற்றும் கணக்கீடுக் கற்கை நெறிக்கு 20 பயிலுனர்களுமாக மொத்தம் 198 பயிலுனர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட பயிலுனர்களுக்கான கடிதங்கள் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அதில் கோரப்பட்டுள்ள ஆவணங்கள் மற்றும் பொருட்களுடன் குறித்த நேரத்திற்கு சமூகம் கொடுக்குமாறு கேட்டுள்ளார்.

2021,2022 ம் ஆண்டுகளுக்கான க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, புதிய பயிலுனர் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக தெரிவித்தார்.

இணைய வழி ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு தெரிவுகள் நடைபெற்று அனுமதிக்கான புதிய பயிலுனர்களின் எண்ணிக்கை அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

## சுற்றுலா தளமாக மாறிய மட்டக்களப்பு கோட்டை!



(கல்லடி குறுப் நிருபர்)

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு வரலாற்று தொன்மை வாய்ந்த பல இடங்கள் காணப்படுகின்றன. அந்தவகையில் இவற்றுள் மட்டக்களப்பு கோட்டை முக்கியத்துவம் பெறுகின்றது.

குறிப்பாக மட்டக்களப்பு மாவட்ட செயலகம் கோட்டையின் உள்ளே அமைந்துள்ளது. தற்போது அது வேறொரு இடத்துக்கு மாற்றப்பட்டதை தொடர்ந்து இக் கோட்டையானது சுற்றுலா தளமாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கோட்டையானது ஒல்லாந்தர் மற்றும் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலங்களில் பல்வேறுப்பட்ட பரிணாமங்களுடன் வளர்ச்சிப்பெற்றுள்ளது.

தற்போது அது இலங்கையின் வரலாற்று சின்னமாக காணப்படுகிறது. இவ்வாறு பல சிறப்புக்களை கொண்ட மட்டக்களப்பு கோட்டையை இனி அனைவரும் சென்று பார்வையிடலாம்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட

## தேசிய ஒருமைப்பாட்டு ஆற்றல் விருத்தி செயற்றிட்ட நிகழ்வு



திராய்க்கேணி தினகரன் நிருபர்

நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவினால் USAID மற்றும் குளோபல் கம்யூனிட்டீஸ் அனுசரணையில் அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருக்கோணமலை மாவட்ட தமிழ் மொழி மூல தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகத்தர்களுக்கான ஆற்றல் விருத்தி செயல் திட்டம் அண்மையில் பொலன்னறுவை சுது அறளிய ஹோட்டலில் இடம்பெற்றது

இந் நிகழ்வில் தேசிய ஒருமைப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் திருமதி எஸ்.பி சாணிக்கா விஜேசூரிய மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்திற்கான நிறுவகத்தின் (ONUR) உதவிப் பணிப்பாளர்களான திருமதி சந்துணிக்கா மற்றும் திரு சுசந்த குமார மற்றும் USAID நிறுவனத்தின் திட்ட அமுல்படுத்துனர்களான Global Community நினரின் SCORE திட்டத்தின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் நுவான் சுபசின்கவும் அதிதியாக கலந்து கொண்டதுடன் வளவாளர்களாகவும் செயற்பட்டு இலங்கையின் நிலையான நல்லிணக்கத்தை கொண்டுவருவது தொடர்பாக தேசிய ஒருமைப்பாட்டு உத்தியோகஸதர்களின் வகிபாகம் தொடர்பாகவும் எதிர்கால செயற்திட்டங்கள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டது.

## மீனவர்கள் இருவரை காணவில்லை

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

அட்டாளைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் இருவரை காணவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போன இரு மீனவர்களும் கடந்த 12ஆம் திகதி மீன்பிடிக்க சென்றுள்ளனர்.

வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில், அட்டாளைச்சேனை கப்பலடி கடற்கரை பிரதேசத்திலிருந்து கடற்றொழிலுக்காக சென்றுள்ளனர்.

இவர்கள் மறுநாள் சனிக்கிழமை காலை வேளை கடற்பகுதியிலிருந்து கரைக்கு திரும்பியிருக்க வேண்டும். ஆனால் ஒரு வாரமாகியும் இதுவரை மீனவர்கள் கரை சேராமையால் இவர்களை தேடும் பணி கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அட்டாளைச்சேனை மற்றும் சின்னப்பாலமுனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த இருவரும் கடற்றொழிலை நீண்ட காலமாக மேற்கொண்டு வருபவர்களென உறவினர்கள் தெரிவிக்கின்றனர். 40 வயதுடைய சின்னப்பாலமுனை02 ஐச் சேர்ந்த ஐ.எல். இர்பான் என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை, 24 வயதுடைய அட்டாளைச்சேனை06 ஆம் பிரிவைச் சேர்ந்த கே.ஆர்.எம். நிஸ்பர் என்னும் இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆகியோரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

ஒரு இரவுப் பொழுதில் கடலில் தரித்து நின்று மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு மறுநாள் காலை வேளையில் திரும்புகின்ற வழக்கத்தை இவர்கள் கொண்டிருந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளையில் மீனவர்கள் ஆழ் கடலில் இருந்தவாறு தமது உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் தொலைபேசி அழைப்பை மேற்கொண்டுஉரையாடியதாகவும்அதன் பின்னர் இவர்களது தொலைபேசி அழைப்பு செயலிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

பொலிஸார், கடற்படையினர், அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய அதிகாரிகள் மற்றும் துறைசார் தரப்பினரிடமும் இவ்விடயம் தொடர்பில் அறியப்படுத்தி மீனவர்களை தேடும் முயற்சிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# யுத்தத்தை வெற்றிகொண்டேன் என மமதையுடன் முழங்கிய சரத் பொன்சேகாவுக்கு தமிழ்மக்களை வாக்களிக்க சொன்னவர்கள் யார்

## ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் கேள்வி

(யாழ். விசேட நிருபர்)

புலிகளை மட்டுமே அழித்து பயங்கரவாத யுத்தத்தை வெற்றி கொண்டேன் என மமதையுடன் முழங்கிய சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்களை வாக்களிக்க சொல்லி தமிழ் மக்களின் ஒற்றுமையை வெளியுலகுக்கு காட்டியதாக கூறிய தமிழ் தேசியம் பேசும் கட்சிகள் அதனூடாக தமிழ் மக்களின் நலனுக்காக இதுவரை சாதித்தது என்ன என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை சிறீரங்கேஸ்வரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்றையதினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதை உலகுக்க காட்டுவது தான் எங்களது விருப்பம். அது தான் பொது வேட்பாளர் விடயம் என புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் சில தினங்களுக்கு முன்னர் கூறியுள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த சமயம் அக்கட்சிகளின் தலைவர்களுக்குள் ஒற்றுமை எவ்வாறு இருந்தது? என்பதை மக்கள் நன்கு அறிவார்கள். அச்சமயம் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி தீவிரமான போலித்தேசியம் பேசியிருந்தனர்.

அதன்பின்னர் 16 நாடாளுமன்ற உறுப்பினர்களை கொண்டிருந்த போது புளொட் அமைப்பும் அதில் அங்கம் வகித்திருந்தது.

பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பில் 10 நாடாளுமன்ற உறுப்பினர்களாக குறைவடைந்த பின்னரும் அவர்களது ஒற்றுமையை சர்வதேசம் நன்கு அறிந்துவைத்திருக்கின்றது.

சமீபத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உட்பட இந்தியத் தரப்பினரும் அதேபோன்று பல நாடுகளின் இராஜதந்திரிகளும் கூட்டமைப்பின் ஒற்றுமைபற்றி பல்வேறு கருத்துக்களை வெளியிட்டுவந்துள்ளனர்.

அமரர் சம்பந்தன் அவர்களது இறுதி நிகழ்வில் கலந்துகொண்டு அஞ்சலிசெலுத்த வந்திருந்த பாரதிய ஜனதா கட்சியின் தமிழக தலைவர் அண்ணாமலையை சந்திக்கும்போது கூட போலித்தேசியம் பேசுகின்ற கட்சிகள் ஒற்றுமையை அதில் கூட காண்பித்திருக்கவில்லை. இதெல்லாம் அனைவரும் அறிந்த விடயம்.

இந்த சூழலில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் திணைக்களத்திற்கு முழுமையான அதிகாரம் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் பொதுவேட்பாளர் யார் என்பதைக் கூட தெரிவு செய்ய முடியாத நிலையில் ஒற்றுமையை காட்டுவதன் மூலம் நாம் உலக நாடுகளிடையே எமது சரியான நிலைப்பாட்டை காட்டக்கூடியதாக இருக்கும் அதற்காகவே இந்த முயற்சி செய்கின்றோம் என ஏமாற்றுவது தமிழ் மக்களையே தவிர தென்னிலங்கையை அல்ல.

சரத் பொன்சேகவுக்கு வாக்களிக்க சொன்னவர்கள் பின்னர் மைத்திரிக்கு வாக்களிக்க சொன்னவர்கள் அதன் பின்னர் சஜித்துக்கு வாக்களிக்க சொன்னவர்கள் இவ்வாறு தொடர்ச்சியாக தமிழ் மக்களின் வாக்குகளை தமது நலன்களுக்காக பகடையாக்கி வருகின்றனர்.

முதலில் தூய்மையான ஒற்றுமையை, பொதுவான அரசியல் கொள்கையை, தமது பொது வேலைத்திட்டத்தை தைரியமாக மக்களிடத்தில் எடுத்துச் சொல்வார்களா? அவ்வாறான தன்மை அவர்களிடம் இருக்கின்றதா?

மக்களிடம் தத்தமது கொள்கைகளை எடுத்துச் செல்ல தென்பற்றவர்களே இவ்வாறு ஒற்றுமை, பொது வேட்பாளர் என்ற வெடங்களை அணிந்து செல்லவேண்டிய வெட்கக்கேடான நிலையில் உள்ளனர் என மேலும் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

நெஞ்சில் கல்லை சுமந்து கொண்டு விடைபெறுகிறேன்

## தென்மராட்சியை விட்டுப் பிரியும் வேளையில் அர்ச்சுனா மனமுருகல்

(சாவகச்சேரி விசேட நிருபர்)

"என் சிறிய இதயத்தில் கல்லை சுமந்து கொண்டு தென்மராட்சியை விட்டு விடைபெறுகிறேன்" என வைத்தியர் அர்ச்சுனா மனமுருகி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

கடந்த (18/07) வியாழக்கிழமை தென்மராட்சியை விட்டு பிரிந்து செல்ல முன்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்படி கருத்தைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்;

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் சென்றிருந்தேன். அங்கு பல்கலைக்கழக மாணவர்கள் என்னோடு புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர். அந்த அன்பு இங்குள்ள அரசியல்வாதிகளிடம் இல்லை என்பது வருத்தமளிக்கின்றது. ஒருவரது மனதில் இடம் பிடிக்கும் வல்லமை அவர்களுக்கு இல்லை.

நான் இந்த தருணத்தில் எனக்கு ஆதரவளித்த உலக வாழ் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக சாவகச்சேரி மக்களுக்கு நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன்.

சாவகச்சேரி மக்கள் என் இதயத் துடிப்பின் புள்ளி. இங்கே தான் எல்லாமே ஆரம்பிக்கின்றது. என் இதயத்தை துடிக்க வைத்துக் கொண்டிருப்பவர்கள் சாவகச்சேரி மக்கள். சாவகச்சேரிக்கு அரசியல் பிரதிநிதித்துவம் கட்டாயம் தேவை. ஓர் படித்தவரை முன்நிறுத்துங்கள். அவரை நான் சிகரத்தில் ஏற்றுகிறேன்.

மக்களுடைய குரல் உள்ளூராட்சி சபைகள், மாகாணசபைகளில் ஒலிப்பது போன்று பாராளுமன்றத்திலும் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

சாவகச்சேரிக்கு ஓர் சிறந்த அரசியல் பிரதிநிதித்துவம் கிடைக்குமானால் அந்த பிரதிநிதிக்கு கார் சாரதியாக இருக்க வேண்டுமானாலும் நான் தயாராக இருக்கிறேன் என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவில் உதித்த பாடசாலை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக் கருவிற்கேற்ப ஜனாதிபதி நிதியத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வானது (19) முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் பங்கேற்புடன் இடம்பெற்ற குறித்த தேசிய ரீதியிலான நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் முல்லைத்தீவு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட சுமார் 922 மாணவர்களுக்கான புலைமைப் பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ். நெடுந்தீவு கடலில் குழந்தை பிரசவித்த பெண்

(யாழ்.விசேட நிருபர் )

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடலில் பெண்ணொருவர் நேற்று முன்தினம் குழந்தை பிரசவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பகுதியை சேர்ந்த பெண்ணொருவருக்கு பிரசவ வலி ஏற்பட்டதையடுத்து, நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையில் இருந்து, அம்புலன்ஸ் படகு மூலம் யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கு மருத்துவ அதிகாரி, மருத்துவ மாது உள்ளிட்டவர்களின் உதவியுடன் அப்பெண்ணை குறிகாட்டுவான் இறங்கு துறை நோக்கி அழைத்து வந்துள்ளனர்.

அதன்போது அப்பெண் படகினுள் குழந்தையை பிரசவித்துள்ளார். தொடர்ந்து தாயையும் சிசுவையும் குறிகாட்டுவான் அழைத்து வந்து, அங்கு தயார் நிலையில் இருந்த நோயாளார் காவு வண்டியில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று அனுமதித்துள்ளனர்.

தற்போது தாயும் சேயும் நலமுடன் இருப்பதாக வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## விபத்துக்குள்ளான கப்பலில் பணியாற்றிய மூவரும் வடமராட்சியை சேர்ந்தவர்கள்

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

ஓமான் நாட்டு கடலில் விபத்திற்குள்ளான எரிபொருள் கப்பலில் பணியாற்றிய இலங்கையர்களான மூவரும் வடமராட்சி வல்வெட்டித்துறை மற்றும் தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்தவர்கள் என அவர்களது உறவினர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை (15) ஓமான் நாட்டிற்கு அருகே விபத்துக்குள்ளான எண்ணைக் கப்பலிலிருந்த 16 பணியாளர்கள் காணாமல் போயிருந்த நிலையில் அவர்களில் இலங்கையர் ஒருவர் உட்பட ஒன்பது பணியாளர்கள் இந்திய கடற்படையினரால் மீட்கப்பட்டு, அவர்களது பாதுகாப்பில் உள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அனர்த்தத்தில் ஒரு பணியாளர் உயிரிழந்துள்ளதாக ஓமானின் கடல் சார் பாதுகாப்பு நிறுவனம் தனது உத்தியோகபூர்வ X கணக்கில் பதிவிட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் கப்பலில் காட்டுவளவு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த தயாநிதி அப்பாச்சாமி வயது 69 என்பவர் பிரதான பொறியியலாளராகவும், வல்வெட்டித்துறையை சேந்தவரும் தற்போது பம்பலப்பிட்டி, கொழும்பை வதிவிடமாகக் கொண்ட கதிர்காமதாசன் வைத்திய குமார் வயது 65 என்பவர்

கப்பல் கப்டனாகவும், ஊரிக்காடு, தொண்டைமானாறைச் சேர்ந்த குகனநேசன் மகேசதாசன் கப்பலின் இரண்டாம் தர அலுவலராகவும் கடமையாற்றியுள்ள நிலையில். குகனநேசன் மகேசதாசன் என்பவரே இந்திய கடற்படை யுத்த கப்பல் மூலம் காப்பாற்றப்பட்டதாக இங்குள்ள உறவினர் மூலம் அறிய முடிகிறது.

ஏனைய ஆறு பணியாளர்களை தேடும் பணியில் ஓமான் நாட்டு கடற்படை கப்பல்களும், இந்திய கடற்படைக் கப்பல்களும் ஈடுபட்டுள்ளதாக சர்வதேச செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## குண்டு கண்டுபிடிப்பு

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

வடமராட்சி கிழக்கு குடத்தனை பொற்பதி பகுதியில் பழமையான கைக்குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை (9) காலை அப்பகுதியில் உள்ள தேவாலயம் ஒன்றிற்கு அருகாமையில் கைக்குண்டு காணப்படுவதாக பொதுமக்களினால் கடற்படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து அதை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## பொருளாதார பரிமாற்றல் சட்ட மூலம் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம் குறூப் நிருபர்)

ஜனாதிபதி செயலகமும் கல்வி அமைச்சும் இணைந்து "அபிவிருத்தியை நோக்கி எமது நாடு" எனும் தொனிப்பொருளில் பொருளாதார பரிமாற்றல் சட்ட மூலம் மற்றும் அரச நிதி முகாமைத்துவ சட்ட மூலம் தொடர்பில் தெளிவூட்டும் செயலமர்வு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நேற்று (19) காலை 9.30 மணியளவில் நடைபெற்றது.

இந்த செயலமர்வில் யாழ். வலயத்தில் உள்ள பாடசாலைகளில் உயர்தரத்தில் கலை மற்றும் வணிகத்துறையில் கல்வி பயிலும் மாணவர்கள் பங்குபற்றியிருந்ததுடன், பொருளாதார பரிமாற்றல் சட்ட மூலம் மற்றும் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் மாணவர்கள் உரையாற்றியதுடன், துறை சார்ந்த அதிகாரிகளின் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில், ஜனாதிபதி செயலக அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், எனப்பலர் கலந்து கொண்டனர்.

## சனச தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் மூலம் யாழ். மாவட்ட 350 கிராமங்கள் துரிதகதியில் அபிவிருத்தி

(கோப்பாய் குறூப் நிருபர்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 350 கிராமங்கள் துரிதகதியில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

நாடு முழுவதும் 5 ஆயிரம் கிராமங்களை, அபிவிருத்தி செய்யும் சனச தேசிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் யாழ். மாவட்டத்துக்கான கலந்துரையாடல் நேற்றுமுன் தினம் வியாழக்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விருந்தினர் விடுதியொன்றில் இடம்பெற்றது.

இதன்போதே, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 350 கிராமங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பில் ஆராயப்பட்டது.

கலந்துரையாடலில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இ. இளங்கோவன், யாழ். மாவட்ட பதில் செயலாளர் ம.பிரதீபன், சனச சங்கத்தின் தலைவர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். குறித்த வேலைத் திட்டத்தின் ஊடாகப் புதிய வேலை வாய்ப்புகள் பலவற்றை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

# மலைச்சாரல்

## மரக்கிளை முறிந்து விழுந்து ஒருவர் உயிரிழப்பு

(நானுஓயா நிருபர்)

வலப்பனை மத்துரட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அம்பட்டிகோட பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (18) வீட்டுக்கு அருகில் உள்ள மரத்தின் கிளையொன்று முறிந்து விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் 47 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதியில் சீரற்ற வானிலையால் காற்றின் தாக்கம் அதிகமாக காணப்பட்டதாக தெரிவிக்கின்றனர்.

இந்தக் கிளை முறிந்து தலையில் விழுந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மத்துரட்ட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



பசறை கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நேற்றைய தினம் பசறை சோமபால சேனவிரத்ன விளையாட்டரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினரும் அதிமேதகு ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான வடிவேல் சுரேஷ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வில் ஊவா மாகாண கல்விச் செயலாளர் மற்றும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ரூ.50 இலட்சம் செலவில்

# அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை அபிவிருத்தி

(மாவத்தகம தினகரன் நிருபர்)




அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை ரூ.50 இலட்சம் செலவில் பாரியளவில் மீள் நிர்மாணிக்கப்படவுள்ளது.

அக்குறணை முழுவதும் கல்வியில் துரிதமான மறுசீரமைப்பையும் மேம்பாட்டையும் செல்வந்தர்களுடைய வகிபாகத்துடன் மேற்கொண்டாலும் அத்தகைய வளங்களை அரசாங்கத்தின் ஊடாகவும் பெற்றுக் கொள்ளுகின்ற புதிய முறைமையையும் வடிவத்தையும் புதிய அரசியல் மாற்றத்தையும் கொண்டு வர வேண்டுமென அக்குறணை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் தெரிவித்தார்.

அக்குறணை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீனின் வேண்டுகோளுக்கிணங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் அக்குறணை அல் அஸ்ஹர் தேசிய பாடசாலை ரூ. 50 இலட்சம் செலவில் பாரியளவில் மீள் நிர்மாணிக்கப்படவுள்ளது. ஏ. ஹோல் வேலைத்திட்டத்தின் ஆரம்பப் பணியை அங்குரார்ப்பணம் செய்து வைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா அதிபர் எம். எப். எம். சிராஜ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இப்பாடசாலை அபிவிருத்திக் குழுவினால் ரூ.45 கோடி செலவில் மிகவும் பாரியளவில் ஏ ஹோல் திட்டத்தின் மூலம் மீள் நிர்மாணிக்கப்படவுள்ள வகுப்பறைக் கட்டடத் தொகுதிக்கு அண்மையில் மரணமான அவரது தாயின் பெயரில் 50 இலட்சம் ரூபாவை நன்கொடையாக வழங்கவுள்ளதாகவும் அக்குறணை பிரதேச சபை முன்னாள் தவிசாளர் இஸ்திஹார் இமாமுதீன் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அக்குறணை பள்ளிவாசல்கள் சம்மேளத்தின் தலைவர் சட்டத்தரணி அஸ்மி, அக்குறணை ஜம்மிய்யதுல் உலமா சபையின் தலைவர் மௌலவி சியாம், பாடசாலை அபிவிருத்திக்கு குழு உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் பெற்றோர்கள் , மாணவர்கள் எனப் பெரு எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது எம். ஜே. எம். பைஸலினால் இப்பாடசாலையில் நிலவும் பாரிய வகுப்பறைப் பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் பாடசாலை அபிவிருத்திக் குழு, பழைய மாணவர் சமூகத்தினால் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள ஏ. ஹோல் திட்டத்தின் கீழ் மிகவும் பாரிய அளவில் மீள் நிர்மாணிக்கப்படவுள்ள வகுப்பறைக் கட்டடத் தொகுதி பற்றிய விளக்கம் முன்வைக்கப்பட்டன. அது பற்றிய துண்டுப் பிரசுர விநியோகமும் அஸ்ஹர் ரீம்ஸ் குழுவினரால் முன்னெடுக்கப்பட்டன.

# தினகரன் வர்த்தக உலா

சம்ஸ் பாஹிம்

## இலங்கையில் தடம் பதித்துள்ள Uber Green பூச்சிய காபன் வெளியீட்டை நோக்கி பயணம்




Uber தனது உலகளாவிய பிரதான நிலைபேற்றியல் தயாரிப்பான Uber Green வசதியை கொழும்பில் அறிமுகப்படுத்தியுள்ளது. இது சவாரி செல்கின்றவர்கள் தனது Uber செயலியில் ஒரு சில படிமுறைகள் மூலமாக சூழல்நேயம் மிக்க சவாரிகளை முற்பதிவு செய்துகொள்ள இடமளிக்கும்.

இலங்கையில் 2040 ஆம் ஆண்டளவில் பூச்சிய காபன் வெளியீட்டுடன் போக்குவரத்து மாற்றத்திற்கான தனது பயணத்தை விரைவுபடுத்தும் நோக்குடன், Uber Green மூலமாக மின்சாரத்தால் இயங்கும் வாகன சவாரிகளை விரிவுபடுத்துவதற்கு Uber திட்டமிட்டுள்ளது.

பயணம் செல்கின்றவர்கள் நாடெங்கிலும் பசுமை சவாரிகளை தற்போது கேட்டுப் பெற்றுக்கொள்வதற்கு Uber Green ஐ தெரிவு செய்துகொள்ள முடியும்.

கிரிக்கெட் நட்சத்திரம் சனத் ஜயசூரிய Uber Green இல் சவாரி செய்யும் முதலாவது நபராக இந்நிகழ்வில் வலம் வந்தார்.

இந்நாட்டிற்கு வருகை தந்த Uber இன் பிரதம நிதி அதிகாரி பிரஷாந்த் மகேந்திரராஜா இப்புதிய சேவை தொடர்பில் அறிவிப்பை வெளியிட்டார்.

Uber Green சவாரி ஒன்றுக்கு எவ்வாறு பதிவு செய்வது:

★ Uber செயலிக்குள் நுழைந்து, 'where to' கட்டத்தினுள் நீங்கள் செல்ல வேண்டிய இடத்தை உள்ளிடவும்

★ திரையின் அடிப்பகுதியிலுள்ள Uber Green ஐத் தெரிவு செய்யவும்

★ சவாரிக்கான கட்டணம் அடங்கலாக சவாரிப் பதிவு விபரங்களை சரிபார்த்து Confirm Green என்பதைத் தெரிவு செய்யவும்

Uber இன் பிரதம நிதி அதிகாரி பிரஷாந்த் மகேந்திரராஜா இந்நிகழ்வில் கருத்து வெளியிடுகையில், "2040 ஆம் ஆண்டளவில் எமது தளத்தில் மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு சவாரியையும் மின்சாரத்தால் இயங்கும் வாகனங்கள் கொண்டதாக மாற்றுகின்ற இலக்கினில் நாம் அர்ப்பணிப்புடன் உள்ளதுடன், இலங்கையில் Uber Green ஐ அறிமுகப்படுத்துவதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

தற்போது 17ஆவது நாடாக இலங்கை இப்பட்டியலில் சேர்ந்துள்ளதுடன், Uber Green ஐத் தெரிவு செய்வதன் மூலமாக காலநிலை தொடர்பான அவதானம்மிக்க தெரிவை எமது தளத்தில் சவாரி செல்கின்றவர்கள் மேற்கொள்ள முடியும்" என்றார்.

## மலேசியாவுடன் வல்லப்பட்டை தொழில்நுட்ப பகிர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட சதாஹரித

இலங்கையில் முதல் ஸ்தானத்தில் திகழும் வணிகரீதியான வனவியல் முகாமைத்துவ நிறுவனமும், நிலைபேற்றியலுடனான வழியில் வளர்க்கப்பட்ட அகில் மரம் மற்றும் ஏனைய பசுமை முதலீடுகளில் முன்னிலை வகித்து வருகின்ற ஒரு நிறுவனமுமான சதாஹரித பிளான்டேஷன்ஸ் லிமிட்டெட் (சதாஹரித), மிக முக்கியமான ஒரு சாதனை குறித்து அண்மையில் அறிவித்துள்ளது.

அகில் மரங்களுக்கான நோய்த்தடுப்பு மருந்தான "SP Tech" என்ற தனது தனியுரிம தொழில்நுட்பத்தைப் பகிர்ந்து, விற்பனை செய்வதற்காக, மலேசியாவிலுள்ள அகில் மர வளர்ப்பாளர்களுடன் ஒப்பந்தமொன்றில் இந்நிறுவனம் வெற்றிகரமாக கைச்சாத்திட்டுள்ளது.

நீண்ட காலமாக மேற்கொள்ளப்பட்ட கடுமையான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியின் மூலமாக இத்தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளதுடன், இயற்கையான சேர்க்கைப்பொருட்களை உபயோகித்து அகில் மரங்களில் பிசின் உற்பத்தியை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் ஆரம்ப கட்டமாக, ஆண்டுதோறும் ஒரு மில்லியன் அகில் மரங்களுக்கு நோய்த்தடுப்பு மருந்து ஏற்றப்படுவதுடன், மலேசியாவில் மூன்று மாநகரங்களில் மூன்று புதிய வல்லப்பட்டை



உற்பத்தி தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

2024 ஜுன் 26 அன்று இதற்கான ஒப்பந்தம் மலேசியாவில் கைச்சாத்திடப்பட்டுள்ளதுடன், சதாஹரித நிறுவனத்திற்கு மட்டுமல்லாது இலங்கையின் வணிகரீதியான வனவியல் துறைக்குமே முக்கியமானதொரு சாதனையாக மாறியுள்ளது. அந்த வகையில், இந்த ஒப்பந்தத்தின் விளைவாக ஏற்படும் அபிவிருத்திகளின் பலனாக, 2028 ஆம் ஆண்டளவில் வல்லப்பட்டை எண்ணெய்க்கான உலகளாவிய கேள்வியில் 30% வரை பூர்த்தி செய்யப்பட முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச கூட்டாளர்கள் சதாஹரித நிறுவனத்தின் மீது வைத்துள்ள நம்பிக்கையை இந்த மூலோபாயக் கூட்டாண்மை அடிக்கோடிட்டுக் காட்டுவதுடன், இத்தொழில்துறையில் முன்னோடி என்ற நிறுவனத்தின் ஸ்தானத்தையும் உறுதிப்படுத்தியுள்ளது.

## புதிய Pastel தொடரின் அறிமுகம் மூலம் கற்பனைத் திறனை ஊக்குவிக்கும் Atlas

ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சியின் கீழ் Atlas Axilliaஇன் முதன்மை எழுதுபொருள் வர்த்தக நாமமான (Stationery Brand) Atlas, அதன் துணை பிராண்டான 'Atlax Colour Sparx' கீழ் அதன் புதிய Pastel தொடரை அறிமுகப்படுத்தியது. இந்த Pastelகள் குழந்தைகளின் கற்பனை மற்றும் படைப்பாற்றலைத் தூண்டும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன, இது ஒரு தனித்துவமான மற்றும் ஊடாடும் கலை அனுபவத்தை வழங்குகிறது. சமீபத்திய Havelock City Mallஇல் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் இந்த வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றதுடன், இதில் குழந்தைகள், பெற்றோர்கள், Atlas Axillia இன் பிரதிநிதிகள் மற்றும் பிற சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்றனர்.

Atlas Colour Sarx Pastels வண்ணமயமான மற்றும் தலைப்பு சார்ந்த தொகுப்பில் வருகின்றன, இதில் நான்கு கவர்ச்சிகரமான தலைப்புக்கள் உள்ளன: டைனோசர், விண்வெளி, காடு மற்றும் கடல். Stompy the Dinosaur, Ollie the Octopus, Luna the Space Traveler மற்றும் Jumbo the Elephant போன்ற கவர்ச்சிகரமான கதாபாத்திரங்கள் மூலம் ஒவ்வொரு தலைப்பும் உயிர்ப்பிக்கப்படுகிறது. இந்த கதாபாத்திரங்கள் குழந்தைகளை கற்பனை பயணங்களுக்கு அழைத்துச் செல்ல, படைப்பாற்றல் மற்றும் கற்றலை ஊக்குவிக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற



இதன் வெளியீட்டு நிகழ்வு, 'கற்பனை உலகை ஆராயுங்கள்' என்ற ஊக்கமளிக்கும் செய்தியைத் அடிப்படையாகக் கொண்டிருந்தது. புத்தக வாசிப்பு, Art Hacks மற்றும் ஊடாடும் கதைசொல்லல் உள்ளிட்ட குழந்தைகள் மற்றும் பெற்றோர்களுக்கான உற்சாகம் மற்றும் செயல்பாடுகளால் நாள் முழுவதும் நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வின் சிறப்பம்சமாக, இலங்கையில் முதன்முறையாக, ஒரு மாயாஜால மற்றும் புத்தாக்கமான அனுபவத்தை வழங்கும், டிஜிட்டல் திரையில் குழந்தைகளால் வரையப்பட்ட ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டது.

## 91ஆவது ஆண்டு விஞ்ஞான அமர்வுக்காக பல்மருத்துவ சங்கத்துடன் கைகோர்த்த சிக்னல்

இலங்கை பல் மருத்துவ சங்கத்தின் (SLDA) வெற்றிகரமான 91ஆவது வருடாந்த விஞ்ஞான அமர்வுக்கு, முன்னணி வாய்ச் சுகாதார பராமரிப்பு வர்த்தக நாமமான சிக்னல், பிரதான அனுசரணை வழங்கியுள்ளது. இது கடந்த 2024 ஜூன் 28ஆம் திகதி "புதுமை, புத்தாக்கம் மற்றும் தொழில்நுட்பம்" எனும் கருப்பொருளின் கீழ் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. அறிவுப் பகிர்வு, தொடர்பை ஏற்படுத்தும் வலையமைப்பு, இத்துறையிலான முன்னேற்றங்களை ஆராய்தல் ஆகிய அம்சங்களை முன்னிலைப்படுத்தி மூன்று நாட்கள் இடம்பெற்ற இந்த நிகழ்வு, இலங்கை முழுவதிலும் உள்ள முன்னணி பல் மருத்துவ நிபுணர்களை ஒன்றிணைத்திருந்தது.



சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன உள்ளிட்ட முக்கிய அதிதிகளின் பங்கேற்புடன் இதன் ஆரம்ப வைபவம் இடம்பெற்றது.

இலங்கை பல்மருத்துவ சங்கத்தின் தலைவர் பேராசிரியர் ஹேமந்த அமரசிங்க இதன் போது கருத்து தெரிவிக்கையில், "இலங்கை பல் மருத்துவ சங்கத்திற்கு (SLDA) சிக்னல் வழங்கும் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் இலங்கையில் வாய்ச் சுகாதார அறிவூட்டல் மற்றும் புத்தாக்கத்தை மேம்படுத்துவதற்கு அது கொண்டுள்ள அர்ப்பணிப்புக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்கிறோம். இந்த வருடத்திற்கான நிகழ்வின் கருப்பொருளானது, புதிய தொழில்நுட்பங்களை தழுவுதல் மற்றும் வாய்ச் சுகாதார பராமரிப்பை மேம்படுத்துவதன் முன்னேற்றத்தை பிரதிபலிக்கிறது." என்றார்.

யூனிலீவர் ஸ்ரீ லங்கா நிறுவனத்தின் தனிநபர் பராமரிப்பு, அழகு மற்றும் சுகவாழ்வுக்கான சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ஷாமர சில்வா கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையில் வாய்ச் சுகாதார பராமரிப்பின் தரத்தை உயர்த்துவதற்கு சிக்னல் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் உள்ளது. இந்த அர்ப்பணிப்பானது, பன்முகத்தன்மை கொண்டதாகும். நாம் பயனுள்ள வாய்ச் சுகாதார பராமரிப்பு தயாரிப்புகளை உருவாக்கி வழங்கி வருகின்ற போதிலும், நாம் அதையும் கடந்த விடயங்களையும் மேற்கொள்கிறோம். " என்றார்.

## 50% வரை தள்ளுபடி உடன் Loyalty Rewards; அறிமுகப்படுத்தும் HNB பொதுக் காப்புறுதி

பொதுக் காப்புறுதித் துறையில் முன்னணியில் உள்ள பெயரான HNB General Insurance (பொதுக் காப்புறுதி), தனது விசுவாசமான வாடிக்கையாளர்களுக்கு பல்வேறு பிரத்தியேகமான பலன்களை வழங்கும் அதன் Loyalty Rewards திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் மகிழ்ச்சி அடைகிறது. இந்த திட்டமானது, பல்வேறு துறைகளில் குறிப்பிடும்படியான சேமிப்பு மற்றும் விசேட சலுகைகளை உறுதியளிக்கிறது.

இங்கு HNB பொதுக் காப்புறுதியானது, அதன் பல்வேறு சேவைகள் மற்றும் தயாரிப்புகளில் 50% வரை தள்ளுபடியை வழங்குகின்றது. வாகன உரிமையாளர்கள், குறிப்பாக, மின்கலம் மாற்றீடு மற்றும் பொதுவான வாகன சேவை போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கான தள்ளுபடிகள் மூலம்



அதிகளவான பலன்களைப் பெற முடியும். வாடிக்கையாளர்கள் தங்கள் வாகனங்களை எளிதாகவும், கட்டுப்படியான விலையிலும் பராமரிக்க இந்த திட்டத்தின் மூலம் முடியும் என்பதை இது உறுதி செய்கிறது.

இதன் மூலம், வாடிக்கையாளர்கள் வாகனத் தேவைகளுக்கு அப்பால் ஹோட்டல்களில் தங்குதல், பயணங்களை மேற்கொள்ளல், கையடக்கத் தொலைபேசி உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்தல், மூக்குக் கண்ணாடி சேவைகளை பெறுதல் போன்ற விடயங்களில் ஒப்பிட முடியாத சலுகைகளை பெறலாம்.

HNB பொதுக் காப்புறுதி Loyalty Rewards திட்டமானது, புதிய வாடிக்கையாளர்களுக்கும் இந்த வாய்ப்பை வழங்குகின்றது. இதில் இணைய விரும்புவோர், இந்த பிரத்தியேக சலுகைகளை உடனடியாக பயன்படுத்தி பலன் பெறலாம். ஆர்வமுள்ளவர்கள் HNB GI நிறுவனத்தின் '1303' எனும் உடனடி தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் அல்லது www.hnbgeneral.com எனும் நிறுவனத்தின் இணையதளத்தைப் பார்வையிடுவதன் மூலம் மேலதிக தகவலை பெறலாம்.

## விஷன் கெயார் அனுசரணையில் இடம்பெற்ற 109ஆவது கொழும்பு டென்னிஸ் சம்பியன்ஷிப்

இலங்கையின் பிரபல கண்பார்வை, செவிப்புலன் மற்றும் மூக்குக் கண்ணாடி தீர்வுகள் வழங்குனரான விஷன் கெயார் நிறுவனம், இலங்கையில் விளையாட்டினை கட்டியெழுப்பும் முகமாக, 109ஆவது கொழும்பு டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டிகளுக்கான அனுசரணையை வழங்கி தனது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியது. இலங்கை டென்னிஸ் சங்கம் (SLTA) 109ஆவது தடவையாக ஏற்பாடு செய்த இலங்கையின் பிரதானமான தரம் A டென்னிஸ் போட்டியான கொழும்பு டென்னிஸ் சாம்பியன்ஷிப் போட்டிகள் அண்மையில் கொழும்பு க்ரீன்பாத்திலுள்ள இலங்கை டென்னிஸ் சங்க திடலில் நடைபெற்றது. இலங்கையிலுள்ள




திறமை வாய்ந்த பங்கேற்பாளர்கள் அதிக அளவில் கலந்து கொண்டதுடன், இந்நிகழ்விற்கு தொடர்ச்சியாக 10ஆவது தடவையாகவும் விஷன் கெயார் அனுசரணை வழங்கியது.

இது நாடெங்கிலும் உள்ள டென்னிஸ் ஆர்வலர்களின் கவனத்தை ஈர்த்ததோடு, இலங்கையில் விளையாட்டு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக விஷன் கெயாரின் அர்ப்பணிப்பு இது உறுதிப்படுத்துகின்றது.

போட்டிகள் கனிஷ்ட (ஆடவர் / மகளிர் 12 முதல் 18 வயதுக்குட்பட்டவர்கள்), ஆடவர் மற்றும் மகளிர் திறந்த பிரிவுகள், (35, 45, 55, மற்றும் 65 வயதுக்கு மேற்பட்டவர்கள்) வரையான போட்டிகளுடன், கொழும்பு டென்னிஸ் சம்பியன்ஷிப் ஒவ்வொரு பிரிவையும் உள்ளடக்கி வீரர்களுக்கு தமது ஆற்றல்களை வெளிப்படுத்த களம் அமைத்து கொடுத்தது. நாட்டிலுள்ள அனைத்து வயது பிரிவினரும் பங்கேற்ற இப்போட்டிகள் மூலமாக போட்டியாளர்கள் தமது டென்னிஸ் திறமைகளை வளர்துக் கொள்வதுடன்,அனுபவத்தைமேம்படுத்தும் சந்தர்ப்பமாகவும் இப்போட்டிகள் அமைந்தது.




உலக சுற்றுச்சூழல் தினமான ஜுன் 5, 2024 அன்று CocaCola அறக்கட்டளை மற்றும் World Vision Lanka நிறுவனம் ஆகியவை, கொழும்பில் உள்ள உலக வர்த்தக மையத்தில் மூன்று புதிய Dropin பிளாஸ்டிக் சேகரிப்பு வசதிகளை நிறுவின. ASPIRE திட்டத்தின் கீழ், இந்த நிகழ்வில் உலக வர்த்தக மையத்தின் முன்னால் திறப்பு விழாவும், PET பிளாஸ்டிக் போத்தல்களை தனியாக பிரித்தெடுத்து மீள்சுழற்சி செய்வதின் அவசியம் குறித்து சேகரிப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு அறிவை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்ட தகவல் விழிப்புணர்வு அமர்வுகளும் இடம்பெற்றன. இதற்காக வீட்டில் இருந்து PET பிளாஸ்டிக் போத்தல்களை கொண்டு வருமாறு அனைவரும் ஊக்குவிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஒத்துழைப்பு, உலக வர்த்தக மையத்தில் 30 சேகரிப்பு நிலையங்கள் மூலம் சேகரிக்கப்படும் அனைத்து PET கழிவுகளும் முறையாக தனியே பிரிக்கப்பட்டு மீள்சுழற்சி செய்யப்படுவதை உறுதி செய்கிறது.



DFCC வங்கி, கொழும்பிலும், கண்டியிலும் பக்தி கீதம் மற்றும் அன்னதான நிகழ்வுகளுடன் பொசன் பௌர்ணமி தினத்தை அண்மையில் அனுட்டித்துள்ளது. கொழும்பில் DFCC வங்கி பொரளை கிளையில் இடம்பெற்றதுடன், கண்டியில் அதன் நிகழ்வானது ஸ்ரீ தலதா மாளிகையின் பிரதான மண்டபத்திற்கு முன்னால் இடம்பெற்றது. DFCC வங்கியின் பேஸ்புக், யூடியூப் ஊடாக நேரலையாக ஒளிபரப்பு செய்யப்பட்ட இந்த நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்டனர்.

## 23ஆவது வருடமாக தேவாலயங்களை ஒளியூட்டும் சுதேசி கொஹொம்ப

மூலிகை பராமரிப்பு உற்பத்தியில் முன்னோடியும் சந்தையின் முன்னணி நிறுவனமுமான கந்தானை சுதேசி தொழிற்சாலை, சுதேசி கொஹொம்ப ஆலோக பூஜா திட்டத்தின் கீழ், இலங்கையின் இரண்டு முக்கிய வழிபாட்டுத் தலங்களான கதிர்காமம் கிரி வெஹெர மற்றும் ருஹுணு மகா கதிர்காம தேவாலயங்களை ஒளிரச் செய்தது.



எசல திருவிழாவை முன்னிட்டு நடத்தப்படும் இந்த நிகழ்வு 23ஆவது வருடமாக இம்முறையும் கடந்த 2024 ஜூலை 06ஆம் திகதி முதல் ஜூலை 20ஆம் திகதி வரை இடம்பெறுகின்றது.

இலங்கைக்கு சொந்தமான தொழிற்சாலை எனும் வகையில், இவ்வாறான வருடாந்த 'ஆலோக பூஜா' போன்ற செயற்பாடுகளுக்கு ஆதரவளித்து இலங்கையின் கலாசாரம் மற்றும் பாரம்பரிய விழுமியங்களை பாதுகாப்பதை கடமையாக கருதுவதாக, சுதேசி தொழிற்சாலையின் தலைவி அமரி விஜயவர்தன தெரிவித்தார்.

அனைத்து வழிபாட்டாளர்களின் நலனுக்காக மாத்திரமன்றி நாட்டின் பாரம்பரியத்தை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி இளைய தலைமுறையினருக்கு விழிப்புணர்வூட்டுவதனையும் இது அடிப்படையாகக் கொண்டு, சுதேசி தொழிற்சாலையினால் நாட்டில் உள்ள வழிபாட்டுத் தலங்கள் ஒளியூட்டப்பட்டு வெளிச்சம் போட்டுக் காட்டப்படுகின்றதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஒளியூட்டும் நிகழ்வுகளைத் தொடர்ந்து, இலங்கையின் பாரம்பரியங்கள் மற்றும் வரலாற்றை எடுத்துரைக்கும் வகையான வண்ணமயமான கலாசாரப் போட்டிகளும் இடம்பெற்றன.

'சுதேசி கொஹொம்ப ஆலோக பூஜா சத்காரய' நிகழ்வுடன் இணைந்ததாக, திஸ்ஸமஹாராம, கொஹொம்பகஹபெலெஸ்ஸ பிரதேசத்தில் 'சுதேசி கொஹொம்ப கமட்ட சத்காரய' எனும் நிகழ்ச்சியை சுதேசி ஆரம்பித்துள்ளது. இங்கு சுதேசி கொஹொம்ப, திஸ்ஸமஹாராம, கொஹொம்பகஹபெலெஸ்ஸ வீரவில கனிட்டு வித்தியாலயத்திற்கு தூய நீரை வழங்கும் நடவடிக்கையை எடுத்திருந்தது.

### கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் இன்று

# கந்தசாமி கருணாகரனுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு



அண்மையில் பஸ் விபத்து ஒன்றில் மரணம் அடைந்த அமரர் கந்தசாமி கருணாகரனுக்கு கொழும்பில் வசிக்கும் நண்பர்கள் இணைந்து நடத்தும் கண்ணீர்அஞ்சலி நிகழ்வு பௌர்ணமி தினமான இன்று 20 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு சனிக்கிழமை கொழும்பு வெள்ளத்தை தமிழ் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் அன்னாரது உருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்டு மலர் அஞ்சலி செலுத்தப்படும். அத்துடன் அவர் குறித்த நினைவு அஞ்சலி உரைகளும் அவருடன் நெருங்கி பழகிய அரசியல், ஆன்மீக, ஊடகத் துறை மற்றும் கலைத்துறை சார்ந்த பிரமுகர்களால் நிகழ்த்தப்படும். இந்நிகழ்வில் அவருடன் நெருங்கி பழகிய சகலரையும் கலந்துகொண்டு அன்னாருக்கு அஞ்சலி செலுத்துமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

அமரர் கந்தசாமி கருணாகரன் நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், லங்கா லேடன்ட் லிமிடெட் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், இலங்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் குழு உறுப்பினராகவும் பதவி வகித்து வந்தவர் ஆவார்.

# விம்மி பகவதிஷ்வரின் கண்கவர் நடன கலை நிகழ்வு நாளை



டுபாயிலுள்ள அந்தரா இன்ஸ்டிடியூஷன்ஸ் ஒப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் எல்எல்சி அமைப்பின் "பிரக்ருதி த்வனி 2024, சமுத்ரா மௌக்திகா திகல்ச்சுரல் ஓட் " என்ற நிகழ்வு நாளை 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு மருதானை எல்பின்ஸ்டன் ஹிஸ்டாரிக் தியேட்டரில் நடைபெறவுள்ளது. அனுமதி இலவசம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர், மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் சிவலிங்கம் சதீஸ்குமார், தினகரன், தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்ளவுள்ளார்கள்.

எல்லைகளைத் தாண்டிய கடல் திரைகளை கடந்து ஒரு வசீகரிக்கும் பாரம்பரிய நடன கலைகளுக்குள் உங்களை இந்த நிகழ்வு அழைத்துச் செல்லவுள்ளது. இங்கு இந்தி பாலே நடனம், இந்திய பாரம்பரிய நடனம், கிளசிக்கல் இசை என பல்வேறு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

இந்தியக் கலைஞரும் நடனம் மற்றும் இசை ஆசானுமாகிய திருமதி விம்மி பகவதிஷ்வர் தலைமையில் துபாயிலிருந்து வருகை தரும் சிறப்புக் கலைஞர்கள் இந்நிகழ்வில் தங்களது கலைநிகழ்ச்சிகளை மேடையேற்றவுள்ளனர்.




# கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணத்திற்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி







தினகரன்

THINAKARAN

தினகரன் வாரமஞ்சரி



தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் ஊடக அனுசரணையுடன் கொழும்பில் இயங்கிவரும் நம்பிக்கை நற்பணி மன்றம் நடத்தும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணத்திற்கான அணிக்கு அறுவர் கொண்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி எதிர்வரும் 27, 28 ஆம் திகதிகளில் பொரளை, பேஸ்லைன் வீதியிலுள்ள ரயில்வே கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் முதலாம் இடத்துக்குத் தெரிவாகி வெற்றி பெறும் அணிக்கு ஒரு லட்சம் ரூபா பணப்பரிசும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்படும்.

இரண்டாம் இடத்துக்கு (Runner up) தெரிவாகும் அணிக்கு 50,000 ரூபா பணப்பரிசும் கலாநிதி வி. ஜனகன் வெற்றிக் கிண்ணமும் பரிசாக வழங்கப்படும்.

அது தவிர ஆட்ட நாயகனுக்கு 7000 ரூபா பணப்பரிசும் சிறந்த தொடர் நாயகனுக்கு 5000 ரூபா பணப்பரிசும் சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து வீச்சாளர், சிறந்த களத்தடுப்பாளர் ஆகியோருக்கு 3000 ரூபா பணப்பரிசும் வழங்கப்படும். இதில் 32 அணிகளுக்கு மட்டும் தான் பங்குபற்ற வாய்ப்பு வழங்கப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை 0760095799 என்ற தொலைபேசி இலக்கத்தில் ஜி. சேகரிடம் அல்லது 0773867585 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம். பரமுவிடம் அல்லது 0771784923 என்ற தொலைபேசி இலக்கத்தில் கனகராஜிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## குடும்பஸ்தர் மரணம்

நமுனுகுல கந்தசேன தோட்டப் பகுதியில் வெட்டி சாய்க்கப்பட்ட மரமொன்றில் சிக்குண்டு நபரொருவர் உயிரிழந்துள்ளதாக ஹிங்குருகடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

# வடமாகாண ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியை நடத்துபவர்களுக்கு நாளை மன்னாரில் பாராட்டு



தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் சங்கவி பிலிம்ஸ் நிறுவனம் கலைஞர், இலக்கியவாதி, சமூக சேவையாளர் என மாதாந்தம் ஒருவரை தேர்ந்தெடுத்து கௌரவித்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த மாதம் இந்த கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 21ம் திகதி காலை 10 மணிக்கு மன்னாரிலுள்ள குளிரூட்டப்பட்ட நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. வடமாகாணத்தில் பாரிய செலவில் ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சியை நடத்தி வருகின்ற தொழிலதிபர்களான சிவதுஷியந்தன், S. பிரசன்னராஜ், வி. நிஷாந்தன் ஆகியோரும் பிரபல பாடகரும் இசையமைப்பாளரும் நுண்கலைமாணி பட்டதாரியுமான வெற்றி சிந்துஜன் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். இவர்களை சங்கவி பிலிம்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளரும் மன்னார், பேசாலை சங்கவி தியேட்டரின் உரிமையாளருமான துரைராசா சுரேஷ் கௌரவிக்கவுள்ளார். தமிழக தொலைக்காட்சி நிறுவனங்கள் நடத்துகின்ற ஜூனியர் சுப்பர் சிங்கர் நிகழ்ச்சிகளுக்கு நம் நாட்டு சிறுவர்கள் அனைவருக்கும் சென்று பங்குபற்றுவது என்பது முடியாத ஒரு காரியமாக இருக்கிறது. ஒருவர், இருவருக்குத்தான அந்த வாய்ப்பும் வசதியும் கிடைக்கிறது. எனவே இதனை நிவர்த்தி செய்யும் முகமாக இவர்களில் இந்த நிகழ்வை வடமாகாணத்திலுள்ள ஒவவொரு மாவட்டத்திலும் நடத்தி வருவதன் மூலம் வடமாகாணத்தில் உள்ள அனைத்து சிறுவர்களுக்கும் இதில் பங்கேற்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இதனை நடத்துகின்றவர்களை பாராட்ட வேண்டியது நம் கடமை என்பதால் இவர்களை கௌரவிப்பதில் தினகரன், தினகரன் வாரமஞ்சரியும் சங்கவி பிலிம்ஸ் நிறுவனமும் பெருமை கொள்கிறது. அதேவேளை வடமாகாண குரல் தேர்வில் மன்னார் மாவட்டத்திற்கான குரல் தேர்வு இன்றும் நாளையும் மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# ஸ்கை தமிழ் விருது வழங்கும் விழா இம்முறை இலங்கையில்

கடந்த வருடம் கட்டாரில் உள்ள ஆளுமைகளை கௌரவித்து மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்ற ஸ்கை தமிழ் விருது விழா இம்முறை இலங்கையிலுள்ள ஆளுமைகளை தெரிவு செய்து அவர்களை கௌரவிக்கவுள்ளது.

**விருது வகைகள்:**

★ ஊடகம் மற்றும் பத்திரிகை
★ இலக்கியம்
★ கலை மற்றும் கலாச்சாரம்
★ விளையாட்டுத்துறை
★ சமூக சேவை
★ விவசாயம்
★ கல்வி & தொழில்நுட்பம்
★வணிகம் மற்றும் தொழில்முனைவோர்
★சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர்

இவ்விருதிற்கு நீங்கள் தகுதியானவர் எனக்கருதினால் கீழுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து உங்கள் சுயவிபரங்களுடன் உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களையும் எமக்கு அனுப்பிவையுங்கள்

★விண்ணப்பங்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக Google படிவத்தைப் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

★மேலதிக தகவல்களுக்கு:

www.awards.skytamilnews.com

Whatsapp: 0757000791 / +97431060249




https://www.instagram.com/skytamilawards

https://www.facebook.com/skytamilawards

# ஹட்டனில் வாழ்வை மேம்படுத்தும் கருத்தரங்கு




Universal Mind Rising Foundation என்னும் அமைப்பு தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் ஊடக அனுசரணையுடன் "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற தொனிப்பொருளில் ஹட்டன் கோல்டன் மஹாலில் நாளை 21ஆம் திகதி காலை 8.55 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளது.

உங்கள் வாழ்க்கையை மேம்படுத்துவது எப்படி ? , உங்களை சிந்தனைகளை மாற்றுவதன் மூலம் வாழ்க்கையை மாற்ற முடியும் ஆகிய விடயங்களை கொண்டதாக உயர்ந்த சிந்தனைகளை வளர்த்தெடுப்போம் வாழ்வை மேம்படுத்துவோம் என்ற தொனிப்பொருளில் இந்த கருத்தரங்கை நடத்தவுள்ளது.

இந்த கருத்தரங்கில் ஹட்டனில் உள்ள மூன்று பாடசாலைகளின் ஆசிரியர்களும் மாணவர்களும் பங்குபற்றவுள்ளார்கள்.

உயர்ந்த சிந்தனைகளை வளர்த்தெடுப்பதன் மூலம் வாழ்க்கையை மேம்படுத்தலாம் என்பதனை உயர்தர மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் என பல்வேறு தரப்பினர்களுக்கும் Universal Mind Rising Foundation எனும் அமைப்பின் மூலம் தெளிவுபடுத்தப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

இன்றைய காலத்தில் நாம் பயன்படுத்தும் அனைத்து வரப்பிரசாதங்களும் மனிதனுடைய சிந்தனைகளின் பிரதிபலிப்புகளாக உள்ளன. அத்தகைய சிந்தனைகளை எமது ஆழ்மனதின் வலிமையை கொண்டு மாற்றி அமைப்பதன் மூலமாக நாங்கள் ஒவ்வொருவரும் எமது வாழ்வை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்பதனை இலவசமாக law of attraction மற்றும் nureo linguistics programing முறை மூலம் நிறுவனத்தின் ஸ்தாபகரும் எழுத்தாளரும் கவிஞரும் பேச்சாளரும் விரிவுரையாளருமான சிவகுமாரன் லோகானன் தனது வளவாண்மையில் எடுத்தியம்ப உள்ளார்.

இந்த நிகழ்வுக்கான தலைமையை Universal Mind Rising Foundation நிறுவனத்தின் ஹட்டன் மற்றும் நுவரெலியா பகுதிக்கான செயறிட்ட குழு தலைவி திருமதி விஜயகுமாரி வாமதேவன் மேற்கொள்கிறார்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் " என்ற ஐயன் வள்ளுவனின் வாக்கை மெய்ப்படுத்தும் கருத்தரங்கு செயலமர்விலே மத்திய மாகாணத்தின் ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட், மமா/ஹ/ஹொன்சி கல்லூரி, மமா/ஹ/நுண்கலை கல்லூரி மமா/ஹ/குயில்வத்தை த.ம.வித்தியாலய மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

# டி20, ஒருநாளில் ஆட இலங்கை வரும் இந்திய அணி அறிவிப்பு

இலங்கை வரும் இந்திய டி20 மற்றும் ஒருநாள் அணிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் ரோஹித் ஷர்மா ஓய்வுபெற்ற நிலையில் டி20 அணியின் புதிய தலைவராக சூர்யகுமார் யாதவ் நியமிக்கப்பட்டுள்ளார்.

மூன்று டி20 மற்றும் மூன்று ஒருநாள் சர்வதேச போட்டிகளில் ஆடுவதற்காக இந்திய அணி எதிர்வரும் திங்கட்கிழமை (22) இலங்கை வரவுள்ளது. டி20 போட்டிகள் ஜூலை 27, 28 மற்றும் 30 ஆம் திகதிகளில் பல்லேகலவில் நடைபெறவுள்ளதோடு தொடர்ந்து ஒருநாள் போட்டிகள் ஒகஸ்ட் 2, 4 மற்றும் 7 ஆம் திகதிகளில் கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறவுள்ளன.




இதற்கான டி20 குழாத்தில் 33 வயது சூர்யகுமார் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் அதேவேளை உப தலைவராக சுப்மன் கில் செயற்படவுள்ளார். ஒருநாள் அணியின் தலைவராக தொடர்ந்து ரோஹித் ஷர்மா செயற்படவுள்ளார்.

டி20 இல் இருந்து ஓய்வு பெற்ற விராட் கொஹ்லி ஒருநாள் அணியில் இடம்பெற்றிருக்கும் அதேநேரம் முன்னணி வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரிட் பூம்ராவுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது.

இந்திய டி20 குழாம்: சூர்யகுமார் யாதவ் (தலைவர்), சுப்மன் கில் (உப தலைவர்), யஷாஷ்வி ஜெய்ஸ்வால், ரின்கு சிங், றியான் பராக், ரிசாப் பாண்ட், சஞ்சு சாம்சன், ஹார்திக் பாண்டியா, சிவம் தூபே, அக்ஷார் பட்டேல், வொஷிங்டன் சுந்தர், ரவி பிஸ்னோய், அர்ஷ்தீப் சிங், கலீல் அஹ்மட், மொஹமட் சிராஜ்.

இந்திய ஒருநாள் குழாம்: ரோஹித் ஷர்மா (தலைவர்), சுப்மன் கில் (உப தலைவர்), விராட் கொஹ்லி, கே.எல். ராகுல், ரிசாப் பாண்ட், ஸ்ரேயாஸ் அய்யர், சிவம் தூபே, குல்தீப் யாதவ், மொஹமட் சிராஜ், வொஷிங்டன் சுந்தர், அர்ஷ்தீப் சிங், றியான் பராக், அக்ஷார் பட்டேல், கலீல் அஹ்மட், ஹர்சித் ரனா.

# வடமேல் கால்பந்து தொடரில் அசன்குத்தூஸ் அணி வெற்றி

**புத்தளம் தினகரன் நிருபர்**



வடமேல் மாகாண எட்டு கல்வி வலயங்களின் 24 பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதுக்குட்பட்ட கால்ப்பந்தாட்ட போட்டி தொடரில் புத்தளம் வெட்டாளை அசன்குத்தூஸ் முஸ்லிம் மகா வித்தியாலய அணி சம்பியன் பட்டத்தை வென்றது.

இப்போட்டித்தொடர் கடந்த புதனன்று (17) குருநாகல் சியம்பலாகஸ்கொடுவ பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

இதன் இறுதிப் போட்டியில் வென்னப்புவ சென் ஜோன் பாடசாலை அணியை எதிர்கொண்ட அசன்குத்தூஸ் வித்தியாலயம் 4–2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது. இதன் மூலம் அந்த அணி அகில இலங்கை போட்டிக்குத் தகுதி பெற்றது.

# கிழக்கு கபடி போட்டியில் நிந்தவூர் மதினா வெற்றி

**மாளிகைக்காடு குறூப் நிருபர்**



கிழக்கு மாகாண மட்ட பாடசாலைகளுக்கிடையிலான பெரு விளையாட்டுக்களில் ஒன்றான ஆண்களுக்கான கபடி போட்டிகளில் நிந்தவூர் மதினா மகா வித்தியாலயம் 17 மற்றும் 20 வயது பிரிவுகளில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான 17 மற்றும் 20 வயதுக்குட்பட்ட கபடி போட்டிகளில் நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய கல்லூரி இரண்டாம் இடங்களைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷில் உச்ச பாதுகாப்பு அவசரநிலை



பங்களாதேஷில் மாணவர்கள் மற்றும் பொலிஸாருக்கு இடையிலான மோதல் தொடரும் நிலையில் நாடு முழுவதும் உச்ச பாதுகாப்பு அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகர் டாக்காவில் இணையதளம் மற்றும் தொலைபேசி சேவைகள் முடங்கியுள்ளன. கடந்த வியாழக்கிழமை மாலை அரச தொலைக்காட்சியான பிடீவிக்குள் நுழைந்த ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்குள்ள தளபாடங்கள் மற்றும் பொருட்களை தகர்த்து, தீ வைத்தனர்.

இதனால் ஒளிபரப்பு நிறுத்தப்பட்டு பெரும்பாலான ஊழியர்கள் கட்டடத்தை விட்டு வெளியேறியதாக பங்களாதேஷ் தொடர்பாடல் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பல நாட்களாக இடம்பெற்றுவரும் வன்முறைகளில் குறைந்தது 19 பேர் கொல்லப்பட்டிருந்த நிலையில் கடந்த புதன்கிழமை இரவு தொலைக்காட்சியில் தோன்றிய பிரதமர் ஷெய்க் ஹசீனா, அமைதி காக்கும்படி அழைப்பு விடுத்தார்.

பங்களாதேஷ் சுதந்திரப் போரில் பங்கேற்றவர்களின் உறவினர்களுக்கு அரச வேலைவாய்ப்பில் மூன்றில் ஒரு பங்கை வழங்கும் திட்டத்தை மாற்றக் கோரியே மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இது பாகுபாட்டை ஏற்படுத்தும் முறை என்று குற்றம்சாட்டும் மாணவர்கள் திறமை அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று கோருகின்றனர்.

ஆர்ப்பாட்டங்களை தணிக்கும் முயற்சியாக அரசு கடந்த வியாழனன்று தொலைபேசி மற்றும் இணையதள வசதிகளை முடக்கியது. அன்றைய தினத்தில் வன்முறைகள் அதிகரித்த நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அன்று ஆர்ப்பாட்டங்களில் 32 பேர் கொல்லப்பட்டதாக மருத்துவமனைகளை மேற்கோள்காட்டி செய்தி வெளியானது.

## சர்வதேச செய்திகள்

# உலகெங்கும் இணைய சேவைகளில் பாதிப்பு



உலகெங்கும் பாரிய அளவில் இணையச் சேவைகளில் கோளாறு ஏற்பட்டுள்ளது. பல விமானங்களும் தரையிறக்கப்பட்டிருப்பதோடு அரச சேவைகள், வங்கிகள், பேரங்காடிகள், தொடர்பாடல் மற்றும் ஊடக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவின் பிரதான விமான சேவைகளான டெல்டா, யுனைடெட் மற்றும் அமெரிக்க எயார்லைன் விமானங்கள் தொடர்பாடல் பிரச்சினை காரணமாக நேற்றுக் காலை தரையிறக்கப்பட்டன.

சிட்னி விமானநிலையத்தில் உள்ள விமான தகவல் திரைகள் செயலிழந்ததோடு வூல்வேர்த் மற்றும் கோல்ஸ் போன்ற பேரங்கடி வலையமைப்புகளில் சுய சேவை அமைப்புகள் தவறான செய்திகளை வெளியிட்டன. சிட்னி விமான நிலையத்தில் விமானச் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளதாக செய்தி வெளியாகியுள்ளது.

பிரிட்டன், ஜெர்மனி மற்றும் மலேசிய விமானநிலையங்களிலும் சேவைகளில் இடையூறுகள் ஏற்பட்டுள்ளன. அவுஸ்திரேலிய ஒளிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் நெட்வேர்க் டென் ஆகிய அவுஸ்திரேலிய ஒளிபரப்புக் சேவைகளும் பாதிக்கப்பட்டிருப்பதாக அந்த நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன. வங்கிகளில் ஒன்லைன் சேவைகள் மற்றும் சில பரிவர்த்தனைகள் பாதிக்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தத் தொழிநுட்பக் கோளாறு எதனால் ஏற்பட்டுள்ளது என்பது உறுதி செய்யப்படவில்லை. மைக்ரோசொப்ட் இயங்குதளத்திற்கும் இதற்கும் தொடர்பிருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

சேவைத் தடங்கல் குறித்துக் கருத்துத் தெரிவித்த மைக்ரோசொப்ட், நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் கிளவுட் சேவைகளில் உள்ள சிக்கல்கள் குறித்தும் மற்றும் ஆப் மற்றும் பிற சேவைகளில் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் ஆய்வு செய்து வருவதாக அந்த நிறுவனம் கூறுகிறது.

# தொலைபேசி அழைப்பை கண்காணிக்க அதிகாரம்



குடிமக்களின் தொலைபேசி அழைப்புக்களை இடைமறித்து கேட்கவும் கண்காணிக்கவும் புலனாய்வுத் துறையினருக்கு பாகிஸ்தான் அரசு அதிகாரம் அளித்துள்ளது.

தேசிய பாதுகாப்பு நலன்களைக் கருத்தில் கொண்டு இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

மத்திய அரசின் இந்நடவடிக்கை குறித்து அந்நாட்டு மனித உரிமைகள் ஆணைக்குழு கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் 'எக்ஸ்' தளத்தில் விடுத்த அறிக்கையில் 'இது அரசியலமைப்புக்கு முரணான செயல். அரசியலமைப்பின் 9ஆம் 14 ஆம் மற்றும் 19 ஆம் ஷரத்துகளின் கீழ் குடிமக்களின் சுதந்திரம், கண்ணியம், தனியுரிமை என்பன பாதுகாக்கப்பட்டுள்ளன' என்றும் மனித உரிமை ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

# காசாவில் குண்டு மழைக்கு மத்தியில் இஸ்ரேலின் டெல் அவிவ் நகரில் ஆளில்லா விமானத் தாக்குதல்

## அரிதான சம்பவத்தில் ஒருவர் பலி: ஹூத்திக்கள் பொறுப்பு

காசா மீது இஸ்ரேல் தொடர்ந்து சரமாரித் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் இஸ்ரேலின் பிரதான நகரான டெல் அவிவில் நேற்றுக் காலை இடம்பெற்ற அளில்லா விமானத் தாக்குதல் ஒன்றில் ஒருவர் கொல்லப்பட்டு மேலும் 10 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலுக்கு பொறுப்பேற்றிருக்கும் யெமனின் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள், 'ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனின் டெல் அவிவ் இலக்கு வைக்கப்பட்டது' என்று சமூக ஊடகத்தில் தெரிவித்துள்ளனர்.

'இடைமறிக்கும் அமைப்பைக் கடந்து ராடார்களால் அவதானிக்க முடியாத' புதிய ஆளில்லா விமானத்தை பயன்படுத்தியே தாக்குதல் நடத்தியதாகவும் அது குறிப்பிட்டுள்ளது.

டெல் அவிவ் நகரின் அமெரிக்க தூதரகத்திற்கு அருகில் இடம்பெற்ற இந்த தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தப்படுவதாக குறிப்பிட்ட இஸ்ரேலிய இராணுவம், வான் இலக்குகளை இடைமறிக்கும் வான் பாதுகாப்பு அமைப்பு இயங்காதது குறித்து ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ளது.

'தொலைதூரத்திற்கு பறக்கக் கூடிய மிகப்பெரிய ஆளில்லா விமானம் ஒன்றைப் பற்றியே நாம் பேசுகிறோம்' என்று இஸ்ரேலிய இராணுவ அதிகாரி ஒருவர் தாக்குதலை அடுத்து செய்தியாளர்களிடம் குறிப்பிட்டார்.

இந்த வெடிப்பு இடம்பெற்ற பகுதிக்கு அருகில் இருக்கும் தொடர் மாடி குடியிருப்பில் இருந்து 50 வயதான ஆடவர் ஒருவரின் உடல் கண்டுபிடிக்கப்பட்டதாக இஸ்ரேலிய அவசர சேவை பிரிவினர் தெரிவித்துள்ளனர். தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லா அமைப்பின் மூத்த தளபதி ஒருவர் இஸ்ரேலிய தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்தே டெல் அவிவ் மீதான தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி காசாவில் போர் வெடித்தது தொடக்கம் ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேல் இடையே தினசரி மோதல் இடம்பெற்று வருவதோடு அது முழு அளவில் போர்



ஒன்றாக உருவெடுக்கும் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. பலஸ்தீனர்களுக்கு ஆதரவாகவே செயற்பட்டு வருவதாக ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா மற்றும் ஹூத்தி கிளர்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

எனினும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல் தொடர்வதோடு அண்மைய நாட்களாக அங்கு இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் ஐ.நா. பாடசாலைகள் இலக்கு வைக்கப்பட்டு வருகின்றன.

அண்மைய நாட்களில் காசாவில் உள்ள ஒன்பதாவது பாடசாலையாக நேற்று காசா நகரில் இருக்கும் பாடசாலை ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் அங்கு அடைக்கலம் பெற்றிருந்த இருவர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்திகள் கூறுகின்றன.

மத்திய காசாவின் புரைஜ் அகதி முகாமில் உள்ள வீடு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் இராணுவம் நேற்று நடத்திய செல் தாக்குதலில் குறைந்தது அறுவர் கொல்லப்பட்டதாக அல் ஜசீரா செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார். அபூ ஹசனைன் குடும்பத்தைச் சேர்ந்த ஆறு உறுப்பினர்களே கொல்லப்பட்டதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



நுஸைரத் அகதி முகாமிலும் இஸ்ரேலியப் படை வீடு ஒன்றை இலக்கு வைத்து வியாழக்கிழமை இரவு தாக்குதல் நடத்தியது. இதில் சிறுவர்கள் உட்பட எட்டுப் பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது. இதில் குறைந்தது 15 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தப் போர் காசாவில் பெரும் எண்ணிக்கையான வீடுகள் மற்றும் உட்கட்டமைப்புகளை அழித்திருப்பதோடு கிட்டத்தட்ட அங்கு வாழும் அனைத்து மக்களையும் தமது வீடுகளை விட்டு வெளியேற்றியுள்ளது. இஸ்ரேலிய முற்றுகையால் உணவு, குடிநீர், மருந்து உட்பட அடிப்படை பொருட்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

பலரும் சுகாதாரமற்ற சூழலில் வசித்து வருவதாக காசா சுகாதார நிர்வாகம் குறிப்பிட்டிருப்பதோடு காசா கழிவுநீர் மாதிரிகளில் போலியோ தொற்றுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

'மனிதாபிமான நிலைமை நாம் அனைவருக்கும் கறையை ஏற்படுத்தும் ஒன்றாக உள்ளது' என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸ் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 39 ஆயிரத்தை நெருங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் ஆதரவுடன் எகிப்து மற்றும் கட்டாரினால் முன்னேடுக்கப்பட்டு வரும் போர் நிறுத்த முயற்சிகளும் ஸ்தம்பித்துள்ளன.

# ஜோ பைடன் விலக வாய்ப்பு



அமெரிக்காவில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் ஜனநாயகக் கட்சி ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிடுவதிலிருந்து விலக வேண்டும் என்ற கோரிக்கைகள் குறித்து ஜோ பைடன் ஆலோசித்து வருகிறார்.

கூடிய விரைவில் அவர் போட்டியிலிருந்து விலகுவது குறித்து அறிவிப்பார் என்று அக்கட்சி அதிகாரிகள் கருதுவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமக்கு வெற்றி கிடைக்காமல் போகலாம் என்பதை அவர் ஏற்கும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கக் கூடும் என்று கூறப்பட்டது.

81 வயது பைடன் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்புடன் நடந்த விவாதத்தில் மோசமாகத் தடுமாறியதைத் தொடர்ந்து அவர் போட்டியிலிருந்து விலக வேண்டும் என்ற நெருக்கடி அதிகரித்துள்ளது.

பைடனின் வயது குறித்தும் அவர் நவம்பரில் வெற்றியடைவது பற்றியும் கேள்விகள் எழுந்துள்ளன.

அமெரிக்க மக்களவை முன்னாள் சபாநாயகர் நான்சி பெலோசி சில கருத்துக்கணிப்புகளின் தகவல்களை பைடனுடன் பகிர்ந்துகொண்டதாக சி.என்.என். கூறியது.

பொதுமக்களின் கண்ணோட்டத்தை மாற்ற முடியாது என்றும் அவர் வெற்றியடையும் சாத்தியம் குறைவு என்றும் கருத்துக்கணிப்புகளில் தெரிவதாக பெலோசி கூறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவும் தமது அக்கறைகளை வெளிப்படுத்தியதாக வொஷிங்டன் போஸ்ட் குறிப்பிட்டது.